உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } சார்வரி - தை 10—2—61 { இதழ் 3

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

கடாரம் கொண்டானில் திருப்பணித் தொடக்கம்

சோழப் பெருநாட்டின் கலைப்பண்பையும், வீரத்தின் மாட்சியையும் கடல்கடந்த நாடுகளிலும் பரப்பிய தனிப் பெருங்காவலன் இராசேந்திரசோழன். அளவிறந்த சிவபக்தியும், ஆற்றலும் உடைய மன்னர் மன்னன், நுட்பமதியால் நுண் கலைஞர் பலரை ஆதரித்துப் புரந்த அரசன்; வியத்தகு முறையில் தஞ்சை இராசராசேச்சுவரம் போன்றே கங்கை கொண்ட சோழபுரத்தில் திருக்கோயில்கட்டிய பெருவேந்தன். வடநாடு சென்று கங்கைக்கரையில் வந்தெதிர்த்த மன்னரை

வென்று வாகைசூடித் தென்னாடு திரும்பிய பின் தன் வெற்றி யின் சின்னமாகக் கங்கைகொண்ட சோழபுரத்திலே எல்லாம் வல்ல இறைவனுக்குத் திருக்கோயில் ஒன்று எழுப்பினான் இவ்வளவன். கடல் கடந்து சென்று பர்மா வரை வென்று வந்த இச் சோழப் பெருமன்னன் கடாரம் கொண்டான் என்ற சிறப்புக்கும் உரியவன் ஆயினான். அவ்வெற்றியின் சின்ன மாகக் கடாரம் கொண்டான் என்றே ஊரமைத்தான். அங்கே கயிலாயநாதனுக்குத் திருக்கோயில் எழுப்பித்தான், அதன் மதிற் சிறப்பை மாநிலம் உணருமாறு செயல்புரிந்தான். தமிழகத்துக்குத் தனிப்பெருமை தரும் இக் கடாரம் கொண் டான் மதிற் சிறப்பைச் சிற்பநூல் வல்லோர் வியந்து பாராட்டினர்.

பழங்காலச் சிற்பிகளின் உறுதிப் பத்திரத்தில், கடாரம் கொண்டான் மதில், திருவீழிமிழலை வௌவால் மண்டபம், திருவலஞ்சுழிக் கருங்கற் பலகணி, ஆவுடையார்கோயில் கொடுங்கை, தஞ்சை நிழல்விழாத கோபுரம் ஆகிய ஐந்து வியத்தகு நுட்பங்களைத் தவிர பிறவற்றைச் செய்து தருவ தாக எழுதுவராம் எனின் இக் கடாரம் கொண்டான் சிறப்பை விளக்க வேறு சான்றும் வேண்டுமோ ?

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் புரிந்தருளிய திருக்கயிலாய யாத்திரைக்குப் பிறகு, கங்கை கொண்டசோழபுரம் திருக்கோயில் திருப்பணி புரிந் தருள ஒரு குழுவை அமைத்துச் செயலாற்ற வைத்தருளி யுள்ளார்கள். திருவாரூரை யடுத்துத் திருவாரூர் நாகை நெடுஞ்சாலையில் உள்ள இக் கடாரம் கொண்டான் திருக் கோயிலுக்கும் திருப்பணி செய்ய எண்ணினார்கள். தமிழ் நாடு செய்த நற்பயனாய் ஆணையராக வந்நாள் முதல் அறப்பணிகளை இடைவிடாது செய்தலையே தம் குறிக் கோளாகக் கொண்டவரும், மூர்த்தி தலம், தீர்த்த யாத்திரை களை முறையே பயின்று அன்புநெறி தழைப்பவரும், பாடல் பெற்ற, பெறாத, பெற்றிழந்த தமிழ்நாட்டுத் தலங்கள் அனைத்தையும் சென்று கண்டு ஆவனபுரியும் பெருந்திறன்

உடையவரும், கல்வெட்டுக்களில் அவ்வத் தலத்துத் திருப் பதிகங்களை ஆங்காங்கு அமைக்கச் செய்துவருபவருமாகிய திரு அ. உத்தண்டராமபிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்களது பெரு முயற்சியும் ஊக்கமுமே துணையாக நின்று இக் கடாரம் கொண்டான் திருக்கோயில் திருப்பணித் திட்டத்திற்கு உதவி செய்தன. ஆணையர் அவர்களைக் கொண்டே இத் திருப்பணி யைத் தொடங்குதல் வேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுள்ளம்.

தருமையாதீனம் இராஜன்கட்டளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த இக்கடாரம் கொண்டான் திருக் கோயிலில் 19-1-61 அன்று, ஆணையர் திரு. அ. உத்தண்ட ராமபிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்கள் பெருமானை வழிபட் டருளியபின் இத் திருப்பணியைத் தொடங்கி வைத்துப் பேருரையாற்றினார்கள். அப்பேருரையில் இத் திருப்பணி புரிய முற்பட்டுள்ள தருமைக்குருமணியின் அருளைப் போற்றி னார்கள் ; கடாரம்கொண்ட சோழனின் பெருந்தன்மையைப் பாராட்டினார்கள். தஞ்சை இராசராசேச்சுவரம் இராசராச சோழனின் பேரன்பின் சின்னமாக நிற்கிறது ; ஆதலின் இன்றளவும் உறுதியாக எழுந்தோங்கி நிற்கிறது. கங்கை கொண்ட சோழபுரமும், கடாரம் கொண்டானும் அவனது படைபலத்தால் உண்டாகிய வெற்றியைக் குறித்தற்கென அமைந்த ஆணவத்தின் சின்னங்களாதலின் பழுதுபட்டு விட்டன ' என்று கூறப்படும், ஒரு கூற்றை மிக அழகாக மறுத்துப் பின் வருமாறு பேசினார்கள் :-

இராசேந்திரசோழன் தகப்பனைப் போலவே சிறந்த சிவனடியான். கங்கையும் கடாரமும் கொண்ட நிலை திரு வருளால் வந்ததென்று நன்கு உணர்வான். அதனாலேயே அவ் வெற்றியின் நினைவாக ஆண்டவனுக்குக் கோயில் எழுப்புவித்தான். அவனது வெற்றி ஆணவம் அவனுக்குப் பெரிதாகப்பட்டிருந்தால் இங்குள்ள பெருமானுக்குக் கடாரம் கொண்டநாதன் என்று பேரிட்டிருக்கலாமே! அங்ஙனம் இன்றிக் ' கயிலாயநாதன் ' என்று பேரிட்டிருப்பதொன்றினா லேயே அவனது அன்புடைமை விளங்கும், ஆதலால்

அன்பின் அடிப்படையில் எழுந்தனவே இக்கோயிலும், கங்கைகொண்ட சோழபுரக் கோயிலும்.

இத்தல விளக்கம் சிந்தனைக்கு விருந்தாக அமைந்து வந்திருந்தோர் நெஞ்சில் எல்லாம் இன்பம் அளித்தது. மேலும் பேசுகையில், "பாடல்பெற்ற பதிகள் பல இன்று நமக்குப் புலனாகவில்லை, எத்தனையோ பதிகங்கள் மறைந்துவிட்ட மையாலே இவ்வாறு நிலை ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்கள், "அப் பழந்தலங்கள் மூவர் முதலிகள் பாடல்களால் சாந்நித்யம் வெளிப்பட்டு அருள் வெளிப்படையாக விளங்கலாயிற்று" என்று தொடர்ந்து ஆணையர் அவர்கள் விளக்கினார்கள். திருக்கயிலாய யாத்திரை புரிந்தருளிய பின்னர், தருமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இக் கயிலாயநாதர் திருப்பணியை மேற்கொண்டது மிகவும் பொருத்தமும் மகிழ்ச்சியும் உடைய செயல். சமுதாய வெற்றிச் சின்னமாக, இராசேந்திர சோழனின் அன்புச்சின்னமாக, வரலாற்றுச் சிறப்புடையதாக விளங்கும் இத் திருக்கோயில் திருப்பணி திருவருள் துணையால் வெற்றிபெறும் என்று நம்புவதாகக் கூறித் தொடக்கவுரை யாற்றினார்கள். ஆணையர் அவர்களின் கடாரம் கொண்டான் பேச்சு உருக்கமும், கிளர்ச்சியும் உடையதாக இருந்தது. உடன் தஞ்சை உதவி ஆணையர் திரு. சோமசுந்தர தேசிகர் அவர்களும் பிற அதிகாரிகளும் வந்திருந்து வழிபட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

கடாரம் கொண்டான் திருப்பணி தொடங்கியிருக்கிறது, திருவருள் துணையால் கயிலாயநாதன் திருவடித் துணையால் இத்திருப்பணி விரைந்து நிறைவேறும் என்பது உறுதி. ஆணையர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் "கடாரம் கொண்டான் மதிற் சிறப்பு" என்ற மொழி விரைவில் கண்கூடாக வெளிப்பட இருக்கிறது. கலையும், சமயமும் சேர்ந்தளிக்கும் அந்த நல்ல தெய்விகக் கலைப் படைப்பை நாடு எதிர்நோக்குகிறது.

மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

"ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நமது சமயப் பிரசாரத்தில் கருத்துக்கொண்டு மேற்கொண்டுள்ள பலவித கைங்கரியங்களில் "ஞானசம்பந்தம்" என்ற மாதாந்தப் பத்திரிக்கையை வெளியிடுவது ஒன்றாகும். அதில் வெளியாகி வருகின்ற கட்டுரைகளும், கண்கவர் படங்களும், மக்களுக்கு மிகவும் பயனுடையனவாகவும், சமய சம்பந்தமான ஐயங்களை நீக்குவனவாகவும் இருக்கின்றன. தருமை ஆதீன சம்பந்தமாக நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளும், மக்களுக்கு அப்போதைக்கப்போது அறிவிக்கக் கூடிய சிறந்த சாதனமாக வும் அது மிளிர்ந்து திகழ்கின்றது.

அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலின் இன்னருளால் 'ஞானசம்பந்தம்' மேன்மேலும் சிறந்து விளங்கி, மாண்புமிக்குள்ள நமது சைவசமயத்தின் உண்மைகளை உலகம் அறியச் செய்யக்கூடிய சீரிய வெளியீடாக என்றென்றும் பொலிந்து திகழுமாறு ஆசீர்வதிக்கின்றோம்,

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்".

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Amirthagateswaraswamy Devasthanam,
Tirukkadayur.

I am very happy to have the privilege to visit this famous shrine. The divinity in the temple is as excellent as the care bestowed by the management in keeping the temple quite trim. I am lonqing to visit the shrine again and again.

(Sd.) G. R. Jagadeesan,
Justice, Madras Highcourt. 4—2—61.

சிவ ஞான போதம்

கட்டுரை 25

முதுபெரும்புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 2, பக்கம் 80 இன் தொடர்பு)

மூன்ருவது சூத்திரத்தின் முதலதிகாரணம், மேற்கோள்

'ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது என்றவாறு' என்பது. இலது - சூனியம். உள்ளதும் அன்று; இல்லதும் அன்று; இரண்டும் ஆவதும் அன்று; வேறும் அன்று எனப்படும் பாழ் சூனியம் எனப்படும்.

அம்மேற்கோளின் கருத்து

1. சூனியான்மவாதி (மாத்துமிகர்).
2. தேகான்மவாதி.
3. இந்திரியான்மவாதி.
4. அந்தக்கரணுன்மவாதி.
5. சூக்குமதேகான்மவாதி.
6. பிராணுன்மவாதி.
7. விஞ்ஞானுன்மவாதி.
8. சமூகான்மவாதி.

என்னும் எண்வகையருள், அந்தக்கரணுன்மவாதி மதத்தை நாலாஞ் சூத்திரத்தில் ஆன்மாவின் இலக்கணம்

கூறும் முறையில் மறுத்தலால், இச் சூத்திரத்தில் அவரொழிந்த ஏனைய எழுவர் மதங்களையும் முறையே ஏழதிகரணங்களிலும் மறுத்து உயிர் உண்டு என்பதைச் சாதிக்கத் தொடங்கினர். அவற்றுள் சூனியமே ஆன்மா என்னும் மாத்துமிகர் மதத்தை மறுத்து. உயிர் உண்டு என்று உணர்த்துவது இம் முதலதிகரணம்.

மேற்கோளின் உரை

ஈண்டு - இவ்வேழதிகரணங்களுள்ளே முதலதிகரணத்தில் (உணர்த்தப்படுவது).

இலது என்றலின் - இஃது உயிர் அன்று இஃது உயிர் அன்று என்று எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, ஆன்மா இல்லை என்று நிற்பது ஒன்று உளது. அதுவே ஆன்மாவாம். சூனியம் (இல்லை) என்று சொல்வது அச் சூனியத்தின் வேருகும். அதுவே ஆன்மா.

'இலது என்றலின்' என்பதனோடு சூத்திரத்தின் முடிவில் உள்ள ' ஆன்மா ' என்பதைச் சேர்த்து, ' ஆன்மா இலது என்றலின் ' என்று கொள்க.

சிற்றுரையில் வெளிப்படை என்று உரையெழுதாமல் விட்ட பகுதிகட்குச் சொற்பொருள் ஆக.

' இவ்வேழதிகரணத்துள் வைத்து இம் முதலதிகரணத்துள் இஃது ஆன்மா அன்று இஃது ஆன்மா அன்று என்று சொல்லும் பொருளுண்மையான் இதனின் வேருய் உயிர் எனப்படுவது ஒன்று உண்டு ' என எழுதினர் ஒருவர்.

இவ்வுரையையும் மெய்கண்டதேவர் அருளிய பொழிப்புரையையும் ஒருங்குவைத்து நோக்கின் இதன் பொருத்தம் இனிது புலப்படும். ' எவற்றினையும் அன்று அன்று என விட்டு ஆன்மா இலது என்று நிற்பது உளது ஆகலின் ' என்பதும்.

* ‘ இஃது ஆன்மா அன்று இஃது ஆன்மா அன்று என்று சொல்லும் பொருள் உண்மையான் ’ என்பதும் ஒரு கருத்துடையன ஆமோ ? ஆயினும் ‘ இலது என்றலின் உளது ஆன்மா ’ என்றதற்கு * அஃது உரையாமோ ? இன்னோரன்ன பல உண்மையால் அதை எழுதியவர் அவரோ அல்லரோ?

பொழிப்புரையின்கீழ் உள்ள சிற்றுரைப் பகுதி

கருத்து :- ஆன்மா இலது என்றலே பற்றி அஃது (ஆன்மா) உண்டு எனக் கோடல் முயற்கோடு இல்லை என்னும் ஏதுவால் அஃது (அம் முயற்கோடு) இல்லை எனச் சாதித்தலோடு ஒக்கும் என்னும் கடாவை ஆசங்கித்து, அதன் தாற்பரியம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை :- ஆன்மா இலது என்னும் சூனியான்மவாதிகளும் இல்லை என வாளா கூறுதல் அமையாமையின், (1) உடல் (2) பொறி (3) விடயம் அனைத்தினையும் முறையானே இஃது ஆன்மா அன்று இஃது ஆன்மா அன்று என ஒரோவொன்றாகக் கழித்து, இவ்வாறாகலின், ஆன்மா (என்பது) சூனியம் என்று அங்ஙனம் கூறுப ஆகலான், அவற்றை ஒரோவொன்றாகவிட்டு அங்ஙனம் கூறிக்கொண்டு நிற்பதோர் அறிவு உண்மையின், அவ்வறிவே (ஆன்மா.) மேல் (இரண்டாவது சூத்திரத்தில்) ‘ அவையேதானேயாய் ’ என்பதனுள் * ஆகம வளவையால் சாதித்துப் போந்த ஆன்மா என்றவாறும். ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது என மேற்கொண்டது.

அவ்வாறு அறியும் அறிவும் சூனியமே என்றால் அஃது என்னைப் பெற்றவள் மலடி என்று சொல்லும் சொல்லுக்கு ஒப்பு என்று ஒழிக] என்பது கருத்து.

* (ஆகமவளவை இரண்டாவது சூத்திரத்தில் முதல் அதிகரணத்தில் ‘ அத்துவிதம் என்ற சொல்லானே ’ என்றதால் உணரப்பட்டது.)

" அன்றன் றேனநின் றனைத்தும்விட் டஞ்சேழுத்தாய்
நின்ருேன் றுளததுவே நீயனைத்தும்—நின்றின்று
தற்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமும் அல்லை தனி. '

இதற்குப் பழையவுரையில் உள்ள போருள் :- " நீ ஆன்மாவாம் என்று சோல்லப்பட்ட எல்லாவற்றையும் நாம் அல்ல நாம் அல்ல என விட்டுநின்று முப்பத்தாறு தத்துவங்களையும் போய்யேன விட்டுப் பிரணவபஞ்சாட்சர சோருபியாய் நிற்கிறதோன்று உண்டே. அதுவே நீ ஆகிய ஆன்மா. இப்போழுது முப்பத்தாறு தத்துவங்களும் உன்னிடத்திலே போருந்திநின்று கண்ணுடியைப்போல் காட்டினதைக் காட்டிக்கோண்டு நிற்கையினுலே நீ உன்னைப் போருந்தின மாயையும் அல்லை மேலாகிய பிரமமும் அல்லை. தனியே ஒரு முதல். " ' அகார வுகார மகார விந்து நாத அறிவுவடிவாய் அந்தக்கரண சோருபியாய் ' என்றும் அடுத்த விளக்கத்தில் அவ்வுரை காட்டிற்று.

பாண்டிப்பேருமாள் விருத்தி, ' லவரயவ என்னும் அஞ்சேழுத்து ' ' கண்ணுடி அடுத்ததோன்றைக் காட்டிநிற்கச்சே அந்தக்கண்ணுடி அடுத்ததாகாததன்மைபோல் தேகாதி அவயவங்களைப் போருந்தி உன்னைக் காட்டுதலாலே உன்னைப் போருந்திவருகிற மாயையின் காரியமாயுள்ளவை நீ அல்லை '.

' கண்ணுடி அடுத்ததனைக்காட்டி நின்ருற்போல என்றும் ஆம் ' ' கண்ணுடியைக் காண்பான் ஒருவனுக்கு ஆதித்தப் பிரகாசம் இன்றிக் காணவோண்ணுதாற்போல, ஆன்மா இந்திரியங்களிடமாக நின்று சீவிக்குமிடத்துக் கர்த்தாவால் ஒழிந்து சீவியாது என்பதுவும் கூறினுர். ' ' மூன்றுமுதலும் தரிசிப்பித்தவாறு ' ' கண்ணுடியை ஒருவன் எடுத்து நடத்திணுற்போலத் தேகத்தையும் ஒருவன் எடுத்து நடத்துவன். ' ' ஆதித்தன் இல்லையாகில் கண்ணுடியாலும் சேட்டையில்லை. '

சிவஞான முனிவர் உரை :- அவ்வறிவை உடல் போறி விடயம் முதலியவற்றின் வேருகப் பிரித்துக் காணுமாறும்

அதுவே உயிராமாறும் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துவது கருத்து. உடல் பொறி விடயம் முதலிய அனைத்தினும் அது அது தானாக நின்று முறையாலே இது நான் அன்று இது நான் அன்று என்று ஒரோவொன்றாகக் கண்டு நீக்குக. நீக்கியவழி அவ்விடத்தில் அகாரம் முதலிய சூக்கும பஞ்சாக்ஷரருபமாய் அறிந்து வந்ததோர் அறிவு நிலைபெற்றுளது. அதுவே நீ.

அதுவும் நான் அன்று எனக் கழிப்பின் அப்படிக் கழித்த உணர்வு வேறு உண்டு எனப்படும். பட்டு மேலும் வரம்பு இன்றி ஓடும். ஆகலின், சூக்குமபஞ்சாட்சரருபமாய் நின்று அறிந்துவந்த அவ்வறிவுதானே நீ என்பது அறிவாயாக. அப்படி ஆனால் மாயையும் [பாடியத்தில்; 'மாயேயமும்' சிற்றுரையில்] சிவமும் உள. இவ்வுண்மை முற்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்டது. அவையே அவ்வறிவையும் அறிந்து நீக்கும் என அமையும். ஆகலின், வரம்பின்றி ஓடுமாறில்லை எனில், நின்னால் சாரப்பட்ட மாயை நிலம் முதலிய காரியம் எல்லாமாய் நின்னோடு விரவி நின்று இப்பேத்தகாலத்தில் கண்ணுக்குக் கண்ணாடிபோல உனக்கு அறிவை விளக்கிநிற்கின்றது. அவ்வளவே அன்றி அறிவது அன்று. ஆகலான், நீ அம் மாயை அல்லை. மாயையான் விளங்கி அறியும் நீ அதற்கு அதீதம் ஆகிய சிவமும் அல்லை. அவற்றின் வேறு.

அஞ்செழுத்தாய் நின்றுளது என்றது அடையாளம்.

1. அனைத்தும் விட்டு :- அனைத்தின்கண்ணும், விட்டவழி.

2. அனைத்தும் - அனைத்துமாய்.

3. தற்பணம் - குறிப்பேதுவாய் நின்ற பெயர். 'தற்பணம்' - 'அமிர்தமதனன்' இதனைப் பசுந்தமிழாற் சொல்லின் 'அமிறுதமதனன்' என்க. (தக்கயாகப்பரணி. 35.)

(தொடரும்)

*ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்பள்ளிக் கமிட்டி உறுப்பினர்கள் சார்பில்

பிரஸிடெண்ட், திரு. T. M. சடையப் பிள்ளை அவர்கள் அளித்தது

சிவநெறி வளர்க்கும் தவக்குரு மணியே வருக !

தென்னன்பொருப்பிலே பிறந்து வையை ஏட்டிலே நவழ்ந்து சங்கத்திருப்பிலே இருந்து உலகமெங்கும் புகழ் மணம் வீசிப் பொலியும் புனிதத் தமிழ் வளரும் பாண்டிநாட்டில் ஸ்ரீவில்லி புத்தூரில் அவதரித்துத் திருவாரூரில் சிவதீக்கை பெற்றுத் தருமபுரத்தில் சைவத் திருமடம் கண்டருளிய ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகளின் திருமரபில்வந்த ஞானமூர்த்தியே! இருபத் தைந்தாம் பட்டத்தில் எழுந்தருளியிருந்து சைவச் செங்கோல் ஓச்சும் தவராச சிங்கமே! சைவமாமுனிபுங்கவர்களின் ஒப்பற்ற தலைவரே ! வருக ! வருக !!

பனசைக்கு எழுந்தருளிய பரமகுருவே வருக !

அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மைபூண்டு ஆகமத்தின் உட்பொருளை அருளுபதேசம் செய்யும் திருநந்தி தேவரை முதற் குரவராகப் பெற்றிருக்கும் சைவ சமயத்தைப் பரிபாலிக்கின்ற தருமையம்பதியின்கண் வீற்றிருந்தருளும் குரு மூர்த்தியே ! போதையார் பொற்கிண்ணத்து ஞானபோனகம் அமுது செய்தருளிய ஞானசம்பந்தரால் பதிகம் பாடிச் சிறப்பிக் கப்பெற்ற திருப்பனந்தாளுக்குத் தாங்கள் எழுந்தருளிப்போந்த

---

*திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்: 25 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சார்வரி ஆண்டு தைத் திங்கள் 16 ஆம் நாள் (29—1—61) ஞாயிற்றுக்கிழமையன்று திருப்பனந் தாளுக்கு எழுந்தருளி ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் அடிப்படைக்கல் நாட்டியருளிய ஞான்று வாசித்தளித்த வரவேற்புரைகள்.

மையால் தங்களின் புனிதத் திருக்காட்சியைக் கண்டு கண்டு எம் உள்ளம் குளிரக் கண்களும் குளிர்ந்தோம். கறவையைக்கண்ட கன்றைப்போல எங்கட்கு மகிழ்ச்சி பெருகுகின்றது.

வடமொழி தென்மொழி வளர்க்கும் தவப்பெரியீர் வருக !

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் என்று அப்பர் சுவாமிகள் அருளியாங்குச் செந்தமிழ்மொழிக்கு ஒரு கல்லூரியும், வடமொழிக்காக ஆகம பாடசாலையும் வைத்துப் பரிபாலித்து வரும் அண்ணலே ! கற்றவர் போற்றும் வித்தகரே ! கல்விக்கெனப் பற்பல தர்மம் செய்துவரும் பெரியீர் ! இப்பனசைவாழ் மக்களும் தத்தம் சிறுர்களைப் பாங்குறப் பயிற்றுவித்துச் சீர் பேறும்வண்ணம் தோன்றுகின்ற இப்பள்ளிக்கு ஒருலக்ஷம்ரூபாய் மதிப்புள்ள நில வருமானத்தை ஆண்டுதோறும் அளிப்பதாகத் தரும சாஸனம் செய்தருளிய கோடைவள்ளல் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆதரவில் திகழ்வதும் ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி எனப் பெயர் சூட்டப்பெற்றதுமான இவ்வுயர்நிலைப்பள்ளிக் கட்டட அடிப்படைக்கல் தங்களால் நாட்டப்பேறுவது பேரிதும் போருத்தமே ஆகும். தாங்கள் கண்டுவந்த கயிலாயமலையைப்போல இப்பள்ளிக்கூடமும் வானுற ஓங்கி நிலவும் என நாங்கள் யாவரும் நம்புகிறோம். அடியோங்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இவ்வருளிச் செயலைச் செய்தருளிய தங்கள் திருவடிக்கண் பன்முறை தாழ்ந்து பணிகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் திருத்தசாங்கம்

செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள் அளித்தது

பூவார்ந்த சோலையில் புக்குலவும் பைங்கிளியே !
நாவாரப் பாடி நடந்தேறி—மூவாக்
கயிலைமலை கண்டுவந்தார் காரார் மலையைக்
கயிலைமலை என்றே கழறு. 1

சொன்னத்தைச் சொல்லுமேனும் தோன்மொழிசேர் கிள்ளையே !
கன்னித் தமிழ்மொழியின் காவலரின்—என்றேன்றும்
மன்னும் தருமபுர மன்னவரின் நன்னதியைப்
பொன்னிநதி என்றே புகல். 2

தரும புரஞ்சூழும் தண்டலைவாழ் தத்தாய் !
கருவேர் அறுக்கவழி காட்டும்—அருட்செல்வம்
சேரச்செய் சுப்ர மணியர் திருநாட்டைப்
பாரதநா டென்றே பகர். 3

வையம் வணக்கும் மலர்க்கணையான் தன்பரியே !
துய்ய கயிலைக் குருமணியாம்—தெய்வத்
திருவாரும் அண்ணல் திருநகரம் தன்னைத்
தருமபுரம் என்றேநீ சாற்று. 4

உவகை மிகுஞ்சொல் உரைக்கும் சுகமே !
தவராசன் எங்கள் தலைவன்—சிவனடிக்கண்
அன்பர் தரும புரநாதன் சூடுந்தார்
கொன்றைத்தார் என்றேநீ கூறு 5

சொல்லிற் சுவைகூட்டிச் சொல்லும் சுவாகதமே !
நல்ல தருமபுர ஞானியின்—எல்லொளிசேர்
மாகக் கயிலைக் குருமணியின் வாசியினை
யோகஞ்சேர் வாசிஎன ஓது. 6

அங்கயற் கண்ணியின் அங்கைசேர் கீரமே !
பங்கயத்தை வெல்லும் பதயுகத்தார்—எங்கட்குத்
தேனன்ன சுப்ர மணியர் தனிக்களிற்றை
ஞானஉம்பல் என்றே நவில். 7

முருகிதழ்போல் செவ்வலகு முற்றும் அரியே !
இருபானேழ் கோயில் உடையார்—அருள்சேர்
கோடையாளர் சுப்ர மணியர் கொடியை
விடைக்கொடி என்றே விளம்பு. 8

தொன்மைத் தமிழர்க்குத் தூதான வன்னியே !
நன்மைத் தருமபுர நாயகம்—வன்மைத்
தவராச சிங்கந் தனது முரசைச்
சிவமுரசம் என்றேநீ செப்பு. 9

பண்ணார்ந்த பாடல் பகரும் பசுங்குருகே !
கண்ணின் மணியாய் அருள்நந்தி—நண்ண
அருளும் கயிலைக் குருமணியின் ஆணை
அருளாணை என்றே அழை. 10

ஊராட்சிமன்ற உறுப்பினர் சார்பில்

பிரஸிடேண்ட், திரு. N. இராசுப் பிள்ளை அவர்கள் அளித்தது

தருமைக் குருமணியே! வருக! வருக!!

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தருமபுர ஆதீனம் செய்துவரும் நற்பணிகள் பற்பலவாகும். ஒல்லும் வகையெல்லாம் நல்ல பல தருமம் நடாத்திவரும் அத்தருமபுரத்தில் அல்லும் பகலும் அனவரதமும் சிவச்சிந்தனையோடு இருபத்தைந்தாவது மகாசந்நிதானமாகத் திகழும் தாங்கள் திருப்பனந்தாளுக்கு வருகை தந்தது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. இதயம் பூரிப்படைகிறது.

கயிலைக் குரும்மணியே! வருக! வருக!!

வெள்ளிப் பனிமலையாகி விரிந்து கிடக்கும் இமயத்தினது உச்சியில் ஏற்றங்கொண்ட கயிலைச் சிகரத்தைக் கண்டுவந்த தீரரே! சிவநெறியோடு செந்தமிழும் பேணுதற்குக் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி ஒன்று பரிபாலித்துவரும் பண்பாளரே! உயர்நிலைப்பள்ளி, ஆகமபாடசாலை, தேவாரபாடசாலைகள் சீரும் சிறப்பும் கொண்டு திகழுமாறு நடத்திவரும் ஞானச்செம்மலே! திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் தர்ம சாஸனம் பெற்று, ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி என்று பெயர் தாங்கிய இப்பள்ளிக் கட்டடம் அடிப்படைக் கல்நாட்டுதற்கு எழுந்தருளிய தங்களுடைய மேலானவருகையை இவ்வூராட்சி மன்றத்தாராகிய நாங்கள் பணிவுடன் வரவேற்கின்றோம். வருக! வருக!!

தவத்திற் குருமணியே! வருக! வருக!!

தவநெறிதான் அருள்நெறி என்பதைத் தாரணியோர் நன்கு அறியும் வண்ணம் தவக்கோலத்துடன் அருள் உள்ளம் படைத்த அண்ணலே! வருக! வெள்ளத்தால் வீடிழந்து உடையிழந்து உண்ண உணவிழந்து உள்ளம் உடைந்து வாடிய மக்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் வழங்கிக் காப்பாற்றிய

உத்தமரே! வருக! தயாளரே! வருக! தங்களுடைய திருப் பெயரைத் தாங்கும் இப்பள்ளிக்கூடம் தங்கள் புகழைப்போல் மேன்மேலும் சிறப்புடையவேண்டும் என்பதே எமது விருப்பம். அவ்விருப்பம் உருப்பெற்று வளரும் என்பதற்குச் சான்றாய் இன்று அடிப்படைக்கல் நாட்டியருளும் தங்களுக்கு நாங்கள் பணிவான வணக்கமுடன் நன்றி தெரிவித்து வரவேற்கின்றோம். வருக! வருக!!

முஸ்லீம் ஜமாத்தார்கள் வாசித்தளித்தது

தருமை வாழும் அருமைக் குருமணியே!

தாயைக்காண இருக்கும் சேய்க்குத் தாயின் வருகை பெரு மகிழ்ச்சி தருவது போலத் தங்களைக் காண விரும்பிய எங்களுக் குத் தங்களின் வருகை பெரிதும் மகிழ்ச்சிதருகின்றது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம். தங்களை உள்ளன் புடன் உவகை பொங்க வருக! வருக! என வரவேற்கின்றோம். தருமையாதீனத்து இருபத்தைந்தாவது பட்டத்து எழுந்தருளி யிருந்து அருட்செங்கோல் ஓச்சிவரும் தங்களை இருபத்தைந்து வான வெடிகளுடனும் சிவலிங்கக்கொடி, தேசீயக்கொடி இவை களுடனும் வரவேற்கும் நற்பேறு கிடைத்தமைக்கு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

மோன வாழ்வளிக்கும் ஞானச் செல்வரீர்!

இறைவன் எழுந்தருளியுள்ள இடங்களில் தலைமையானதும், தவமுடையார்க்கு அன்றித் தரிசிக்க இயலாததுமான கயிலை மலைக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுடன் சென்று தரிசித்த அரிய செயலை நினைக்குந்தோறும் நினைக்குந் தோறும் பெரிதும் இன்பம் அடைகின்றோம். "செயற்கரிய செய்வர் பெரியர்" என்னும் தமிழ்மறைக்கு இலக்கியமாகத் திகழும் தங்களைப் பெருமையுடன் பாராட்டுகின்றோம்.

அறம்பெருக்கும் பெருவாழ்வும் அருள்பெருக்கும் திருவாழ்வும் உடையீர்!

நாங்கள் இன்று குடியிருந்துவரும் அடிநிலம் தங்களின் அருளாட்சியில் இருந்துவருவதாகும். அப்பகுதியில் நாங்கள்

குடியிருக்கத் தங்களைக் கேட்டுக்கொண்டபொழுது, தாங்கள் மிகுந்த பரிவுடனும் மகிழ்ச்சியுடனும் கொடுத்தருளிப் பேருதவி புரிந்தீர்கள். அன்றியும் எவ்வெவ்வகையில் இன்னும் உதவ வேண்டும் என்றும் கேட்டருளி ஆதரவளித்தீர்கள். அத்தகைய பேருதவிகளையும், அருளாசியினையும் என்றென்றும் நாங்களும், எங்கள் வழியினரும் மறவாது போற்றும் கடப்பாடுடையோம். தாங்கள் புரிந்த பேராதரவுகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். தாங்கள் நீடுழி வாழவேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்தித்து வருகின்றோம்.

குவலயம் போற்றும் கயிலை மணியே !

தாங்கள் ஒரு அருட்பெருகு தனிக்கடல்! பனசைத் திருமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் உலகுக்கெல்லாம் அன்புசெறி பெருங்கடல்! இருவரும் செய்தருளும் அறப் பணிகளும் அருள்பணிகளும் கணக்கில் அடங்காதனவாகும். தாங்களும் பனசைத் திருமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும் ஊழிதோறூழி வாழவும், தாங்களிருவரின் அருள் நோக்கால் பொதுவாக அனைத்துயிர்களும் சிறப்பாகப் பனசைப் பெருமக்களும் நல்வாழ்வு பெறவும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திரு வாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்.

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

திருப்பனந்தாளில்
ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளிக்
கட்டிடக் கால்கோள் விழா

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும்,
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும்
கால்கோள் விழாவிற்கு எழுந்தருளுதல்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலயம் கந்தசஷ்டி விழாவில்

5 ஆவது நாள் தலைமை வகித்த, திருமுறைச் செல்வர்,
சேலம், திரு. கி. சுப்பராய பிள்ளை அவர்களை வரவேற்றல்

தருமையாதீனம்
இராஜன்கட்டளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் திருவாரூர்
கடாரங்கொண்டான் ஸ்ரீ கயிலாசநாதர் கோவில்



இதன் திருப்பணியை 19-1-61 அன்று
சென்னை மாநில அறநிலய ஆணையர் அவர்கள்
தொடங்கிவைத்துள்ளார்கள்.

தருமையாதீனம்
இராஜன்கட்டளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் திருவாரூர்
கடாரங்கொண்டான் திருப்பணித் தொடக்க விழாவில்



சென்னை மாநில அறநிலையங்களின் ஆணையர்
உயர்திரு. அ. உத்தண்டராமபிள்ளை, பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்.
அவர்களும் ஏனைய பெருமக்களும்.

பழந்தமிழகத்துத் திருவிழாக்கள்

செஞ்சோற்கோண்டல்
வித்துவான். சொ. சிங்காரவேலன், B. A.

கார்த்திகைத் திருவிழா :

பழந் தமிழகத்தில் கார்த்திகை மாதத்தில் சிறப்புற அறம் செய்யப்பட்டது போலும். தமிழர் யாவரும் இத்திங்களில் அறம் செய்து விளக்குகளை வரிசை வரிசையாக வீடுதோறும் ஏற்றி வைத்து 'அவ்வொளிவளர் விளக்கில்' ஆண்டவனைக் கண்டு வழிபட்டனர்.

'அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்'

என்ற நற்றிணைப்பாடல் வரியால், இத்திங்கள் விழாவாகிய திருக் கார்த்திகை தமிழரது அறவிழாவின் அடிப்படை என்று துணியலாம்.

இத் திங்களில் விளக்குகள் தமிழ்நாட்டு வீடுகள்தோறும் வரிசை வரிசையாகப் போலிகின்ற ஒரு திருவிழா கோண்டாடப் பட்டதென்பதனை,

'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகைஉடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி[1]'

என்ற கார்நாற்பது வரிகளாலும்,

'தாக்கி எறிதர வீழ்தரும் ஒண் குருதி
கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே[2]'

என்ற களவழி நாற்பது வரிகளாலும் தேரியலாம். இதனுள்,

'கார்த்திகைச் சாறு'

---

[1] கார் - 26 [2] களவழி - 17.

என்ற தொடர் கார்த்திகை ஒரு திருவிழாவே (சாறு - விழா) என்பதனை நன்கு விளக்கும். இவ்வாறு நற்றிணையும், பதினெண்கீழ்க் கணக்கும் கார்த்திகை ஓர் பழைய திருவிழா என்பதற்குச் சான்று தந்து நிற்கின்றன. அகநானூற்றிலும் கார்த்திகை விளக்கீடுபற்றிக் காணலாம்.

மணவிழா :

திருமணம் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. இவ்வதுவை விழாவைப்பற்றி இலக்கியங்கள் சான்று தருகின்றன. பறை, சங்கு முதலியன திருமணத்தில் ஒலித்தன.

'பறைபடப் பணிலமார்ப்ப'

என்ற குறுந்தொகைப்பாடல் (15) வரியே இதற்குச் சான்று.

'பல்லாரறியப் பறையறைந்து நாள்கேட்டுக்
கல்யாணம் செய்து கடிப்புக்க'

என்ற நாலடிப் பாடலும் (86) இவ்வாறு பறை முழங்கும் செய்தியைக் கூறுகிறது. இம் மணவிழாவில் சிலம்பு கழித்தலும் ஒரு அங்கமாக இருந்தது. இதற்கு இலக்கியங்களும் குறிப்புத் தருகின்றன. அகநானூற்றில் இரண்டு பாடல்களில் திருமணம் பற்றிக் காண்கின்றோம். அகம் 86ம் பாடல் திருமண நிகழ்ச்சி முறைகளைத் தெளிவாக்குகின்றது.

உண்ணா நோன்பு :

பண்டு கடவுளுக்கு நேர்ந்துகொண்டு உண்ணா நோன்பு இருந்து கடவுளை வழிபடும் வழக்கமும் இருந்துவந்தது. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்ற சேரமன்னன் காலத்திலே ஒரு நிகழ்ச்சி.

உண்ணா நோன்புடைய மக்கள் தங்கள் கைகளைத்தலைமேல் கூப்பிக்கொண்டு கடவுளது திருநாமங்களை ஒலிக்கின்றனர். அது நான்கு திசைகளிலும் எழுந்து ஒலித்தது. கோயில் ஆராய்ச்சி மணி 'கல்' லென்று ஒலிக்கிறது. அந்நோன்பு மக்கள் குளிர்ந்த நீர்த்துறையிலே சென்று நீராடிப் பின் துழாய்ச்

செல்வன் திருமகள் - ஆழிப்படையோன் ஆன திருமாலே வணங்கி வழிபாடு செய்கின்றனர்!

இந்த நிகழ்ச்சி பதிற்றுப்பத்திலிருந்து நாமறிவது; காப்பியாற்றுக் காப்பியனாரது கவியமுதம். புலவர்கள் '[1] உள்ளதை உள்ளவாறே கிளத்தல்' (Tincerity) உடையவர்கள். எனவே சேரனது நாட்டில் நிகழ்ந்த இந்நோன்பினை எடுத்துக் கூறியுள்ளார் என்று கோடலே பொருத்தமாம். உண்ணுநோன்பிருந்த நோன்பு மக்களை

'உண்ணாப் பைஞ்ஞிலம்'

என்று அழைக்கிறது காப்பியனார் கவி. இதற்கு உரை வகுத்த பழைய உரைப்பகுதியும்,

"உண்ணாப் பைஞ்ஞிலமென்றது அத்திருமால் கோயிலுள் வரம் வேண்டி உண்ணாது கிடந்த மக்கட்டோகுதியை" என்றே எழுதுகிறது. ஆகவே திருமாலே வழிபட்டு வரங்கிடந்த இந்நோன்பு 'ஏகாதசி' போன்றதொரு நோன்பு ஆகலாம் என்பது தெளிவு.

சோற்று விழா :

சோறளிக்கும் விழா பெருஞ்சோற்று விழா என்றும், சிறு சோற்று விழா என்றும் இருவகைப்பட்டிருந்தது.

'பிண்டம் மேய பெருஞ்சோற்றுநிலை'[2]

என்கிறார் தோல்காப்பியர். திரட்சி போருந்திய பெருஞ்சோற்றை வீரர்களுக்கு நிரம்ப அளித்து மகிழ்தல்,

[3] 'பெருஞ்சோறு உகுத்தற்கு எரியும்
கடுஞ்சின வேந்து சேண் தழங்கு குரல் முரசே'

என்று பதிற்றுப்பத்துக் கூறுவதால், இவ்வாறு பெருஞ்சோறளித்தல் முரசு முதலியன முழங்கி ஒரு விழாவெனவே நடைபெற்றது என்று அறியலாம்.

---

[1] பதிற்றுப்பத்து - 4. 1-2-10 வரிகள். [2] தோல் - 8
[3] பதிற்று - 30.

சிறுசோற்று விழா என்பது சோற்றைத் தயிர் முதலிய வற்ளுேடு கலந்து உருண்டைகளாக்கி அவற்றை வருவோர் ஒவ்வோருவர்க்கும் கோடுத்து மகிழ்தல்.

‘ வாயில் மாடந்தோறும் மைவிடை வீழ்ப்ப
நீ யாங்குக் கோண்ட விழவினும் பலவே [1] ’

என்று சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணஞ் சாத்தனுர் பாடுகின்ற பாட்டு நமக்குச் சிறுசோற்று விழாவைப் பற்றிச் சோல்கிறது. இதில், ‘ விழவேன்பது - சிறுசோற்று விழாவினே ’ என்று உரை தந்திருக்கிறது பழைய உரை. ஆகவே இவ்வாறு சோறளிக்கும் நிலேயும் விழாவாகக் கோண் டாடப்பட்டதேன்பது பேறப்படும்.

எனவே, இதுகாறும் கூறியவாற்ருல் பழந்தமிழ் நாட்டில் மக்களாற் கோண்டாடப்பட்ட விழாக்களில் ஒரு சில இன்னவை என்று பேறப்படும்.

[1] புறம் - 33. (21-22)

EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Sri Panchanadeeswaraswami Devasthanan
Tiruvaiyaru

மகாசந்நிதானத்தின் அருளால் ‘ஆல் இண்டியா’ ஊழியர்களுக்கு ஐயாறப்பன் தரிசனம் வேகு நேர்த்தியாகக் கிடைத்தது. கோயில் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வோரு அங்கத்தினரும் எங்களுக்குச் சேய்தஉதவியும் காட்டியபணிவும்எங்களேப் பேருநன்றிக்குக் கட்டுப் படுத்திவிட்டது. ஆகையால் ஒரு உத்தியோகஸ்தரையும் தனிப் பட்டு குறிக்க இயலாத நிலேயில் உள்ளோம். எல்லா ஊழியர் களுக்கும் மகாசந்நிதானத்தின் அன்பும் ஐயாறப்பரின் கடாக்ஷமும் பேருகவேண்டுமேன்று எங்களது தாழ்ந்த வேண்டுகோள்,

(ஒ - ம்) த. சங்கரன்

7—1—61. விஜயவாடா ரேடியோ நிர்வாகி

மனைத்தக்கமாண்புடைமை

ப. வசந்தா

கலயரின் துணைவி :

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை '' — குறள்

'நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த' எம்பெருமான் எழுந் தருளியுள்ள திருக்கடவூர் தென்னாட்டின் சிறந்த சிவதலங்களில் ஒன்றாகும்.

'பிறையா ருஞ்சடையாய் பிரமன்றலை யிற்பலிகொள்
மறையார் வானவனே மறையின் பொரு ளானவனே
கறையா ரும்மிடற்றாய் கடவூர்தனுள் வீரட்டத் தேம்
இறைவா என்னமுதே யெனக்கார் துணை நீயலதே '

என்று திருநாவலூரர் அமிர்தகடேசரைப் போற்றுகின்றார். இவ் வண்ணமாகப் போற்றப்பெறும் அந்தக் கடவூரில் வாழ்ந்தவர் தாம் கலையர் என்ற பெரியார்.

இவர் எந்நாளும் வழுவாதுகோயிலுக்குச்சென்றுகுங்கிலியத் தூபமிடும் திருப்பணியைச் செய்து வந்தார். நறுவிரை புகைத்து நாதனை வழிபட்டார். செல்வம் மேவிய நாளில் இச் செயல் செய்வதன்றியும் மெய்யினால் அல்லல் நல்குரவான போதினும் வல்லர் என்று அறிவிக்கவே - இளையான்குடி மாறனாருக்கு வறுமை நிலையை வரச்செய்தார். அதே போன்ற வறுமை கலயனாரையும் வந்தடைந்தது. வளம் சுருங்கியும் மனம் சுருங் காமல் முன்பு போலவே திருப்பணியை முட்டின்றிச் செய்து வந்தார்.

'அங்கவர் அருளினாலே வறுமை வந்தடைந்த பின்னும்
தங்கணா யகர்க்குத் தாமுன் செய்பணி தவாமை உய்த்தார் '

மனந்தளராமல் இவ்வண்ணம் திருப்பணியில் ஈடுபட்டிருந்த காலை அவருடைய மக்களும் மற்றவர்களும் உண்ண உணவு இன்றி வருந்தினர்.

வாழ்க்கைத் துணைவியார் - வாழ்க்கைத் தரத்தினைக் கண்டார். உள்ளத்திலே எண்ணம் ஒன்று எழுந்தது. உடனே கலயனாரின் கையில் தனது பொற்றாலியைக் கொடுத்து நெல்லை வாங்கிவரச் சொன்னார். 'காதல்செய் மனைவியார்தங் கணவனார் கலயனார்கைக் கோதில்மங்கல நூற்றாலி கொடுத்துநெற் கொள்ளும்' என்று கூறியவுடன், கலயனார் அதனைக் கைக் கொண்டு செல்கின்றார்.

உற்றுழி உதவுகின்ற இந்த இயல்பினால்தான் பெண்மைக்கு என்றும் பெருமை உள்ளது. அன்றும் இப்படித்தான் - கைப் பொருள் எல்லாம் இழந்து, மனம் திரும்பிய நிலையில் வருகின்றான் கோவலன். கண்டாள் கண்ணகி, கற்புக்கடம்பூண்ட கண்ணகி வேறு ஒன்றினையும் எண்ணாமல் அவன் நல் வாழ்விற்கு உதவ வேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால் 'நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புளகொண்மென ச்சேயிழைச் சொன்னாள். கோவலன் உடனே மனம் திருந்திச் 'சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்' என்று கூறிக் கண்ணகியின் கரம்பற்றி மதுரை சென்றான்.

'ஈகையரிய இழையணி மகளிர்' — புறம் - 127

என்று வருகின்ற புறநானூற்றின் அடியைப் பொய்யாக்குவார் போலக் கலயரின் துணைவியார் தனது பொன் தாலியைக் கலயரிடம் கொடுத்து நெல்பெற்று வரச் சொன்னார்.

கலயர் - கையில் தாலியுடன் செல்கின்ற வழியில் வணிகன் ஒருவன் குங்கிலியப் பொதியுடன் வருகின்றான். கண்டவுடன் கலயரின் உள்ளம் மாறிவிட்டது. பொன்தாலியைக்கொடுத்துக் குங்கிலியப் பொதியை வாங்கிவிட்டார். உடனே விரைந்து சென்றார் திருக்கோயிலுக்கு.

'பொன்தரத் தாருமென்று புகன்றிட வணிகன் றானு
மென்றர விசைந்த தென்னத் தாலியைக் கலயரீந்தார்

அன்றவ னதனை வாங்கி யப்போதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றூர் நிறைந்தெழு களிப்பினோடும்'

இங்நிலையில் கலயனாரின் வீட்டில் இறைவனின் திருவருளினால் அம்பொனின் குவையும், நெல்லும், அரிசியும் நிறைந்தது. கனவிலிருந்து எழுந்து இவற்றைக் கண்டவர் எம்பெருமானின் திருவருளே எல்லாம் என்று மகிழ்ந்து தம்பெருங் கணவனார்க்குத் திருவமுது அமைக்கச் சென்றார். கோயிலில் குங்கிலியப் பணியில் ஈடுபட்டிருந்த கலயனாரின் செவியில், 'சாலநீ பசித்தா யுன்றன் தடநெடுமனையி னண்ணிப் பாலினின் னடிசி லுண்டு பருவர லொழிக' என்ற குரல் விழுந்தது. உடன் 'அலைபுனற் சென்னியார்தம் அருள்மறுத்து இருக்க அஞ்சித் தலைமிசைப் பணிமேற்கொண்டு தம்மனையை அடைந்தார்.

தாம்கொண்டு வந்திருந்த அவலைக் கண்ணபிரானிடம் கொடுத்துவிட்டு அளவளாவி மகிழ்ந்த குசேலர் - தமது வறுமை நிலையை உரைக்க விருப்பமின்றி வீடு திரும்பவும் - செல்வம் நிறைந்து செழுமைபெற்று விளங்கிய தம் மனையை - மனைவி யைக்கண்டு மகிழ்ந்ததுபோலக் கலயரும் கடவுளின் கருணையை நினைந்து பாராட்டினார். என்னையும் ஆளும் எம்பெருமானின் கருணைதான் என்னே என்று மகிழ்ந்தார்.

சிலம்பினைக் கொடுத்துச் சிறப்பினைப் பெற்ற கண்ணகி போலப் - பொற்றாலியைக் கொடுத்துப் புகழினைப்பெற்றார் கலய ரின் துணைவியார். 'கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை' என்ற மொழிப்படி கணவனுடைய நன்மை தீமைகளில் பங்கு பெறுபவளே மனைத்தக்க மாண்புபடைத்தவளாவாள். அவர்கள் காட்டிய வழியில் பெண்ணுலகம் நடந்து நன்மை பல அடைய வேண்டும்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், செ. செல்வப்ப முதலியார்

மேனி தரும் பசி வீய அருந்தல்; மிகுபஞ் சத்துந்
தீனி தருந் தனஞ் சேர்த்து முன் வைத்தல்; செல்வம் பறிக்க
யோனி தரும் விலை மின்னா ரினங்கள்; உயர் மதிப்புக்
கானி தருஞ் சமமல் லாரோடு வினை யாடுவதே. 77

வரலாற்றுக் கற்பனை நாடகம்

* "மனக்கோயில்" *

வித்துவான், ம. சிவசம்பு

(மலர் 20, இதழ் 2, பக்கம் 103 இன் தொடர்ச்சி)

காட்சி 3

இடம் : விக்கிரமாதித்தன் அரண்மனை.

பாத்திரங்கள் : விக்கிரமாதித்தன் - மந்திரிகள் - விநயாதித்தன்

காட்சி விளக்கம்

[இரண்டாம் விக்கிரமாதித்தன் படுத்த படுக்கையாகக் கிடக்கிருன். மந்திரிகள் கவலைதோய்ந்த முகத்துடன் நிற்கிருர்கள். விக்கிரமாதித்தன் விநயாதித்தனை அழைத்துச் சொல்லுகிருன்.]

விக்கிரமாதித்தன் : விநயாதித்தா ! நான் இனிமேல் பிழைப்பேன் என்ற நம்பிக்கையில்லை. எனக்கு நெஞ்சுவலி அதிக இருக்கிறது.

(மார்பைப் பிடித்துக்கொண்டு இருமுகிருன்)

விநயாதித்தன் : அப்பா ! அப்படிச் சொல்லாதீர்கள்.

விக்கிர : விநயாதித்தா ! நம் நாட்டுப் பரம்பரை விரோதியான பல்லவர்களிடம் நீ கவனமாக இருக்கவேண்டும். உன் தாத்தா (இரண்டாம்) புலிகேசியைக் கொன்ற பாவிகள் தலைநகரான வாதாபியைச் சிதைத்தவர்கள். கோட்டை கொத்தளங்களை இடித்துத் தள்ளியவர்கள். நம் நாட்டு மக்களைத் துன்புறுத்தியவர்கள். ஐயோ! மகனே! பரமேஸ்வரவர்மன் பெருவளநல்லூரில் நம்படைகளைச் சின்னுபின்னப் படுத்திவிட்டான். நம்பெருமை எல்லாவற்றையும் அழித்து விட்டான். பல்லவர்களைப் பழிக்குப்பழி வாங்கவேண்டும் நீ!

ஆனால், விநயாதித்தா, இப்போழுது ஆட்சிசெய்யும் இராச சிம்மன் போரிலே சிறந்த வீரன். அவனைப் போரிலே தோற்கடித்து வீராதி வீரனாகத் திகழவேண்டும். நம் குடி கெடுக்கும் குள்ளநரிக் கூட்டங்களைத் தொலைக்கவேண்டும். (இருமுகிறான் ; சொல் தடுமாறுகிறது.) மகனே ! சீரழிந்த நம் நாட்டைச் சீர்படுத்து ; உயர்த்து. அமைச்சர்களே ! விநயாதித்தன் சிறுவன். அவனைக் கவனித்துக்கொள்ளுங் கள். மகனே ! விநயாதித்தா ! நம் நாட்டையும் மக்களையும் காப்பாற்று. அதுவே உன் கடமை ! ஐயோ ! அப்பா ! (இறந்து வீழ்கிறான்).

காட்சி 4

இடம் : இராசசிம்மன் அரசவை.

பாத்திரங்கள் : இராசசிம்மன் - சேனாபதி - மந்திரிகள் - காவலன் - ஒற்றன்.

[நாட்டின்நிலைபற்றி ஆராய்தல்-பஞ்சம் போக்கத் திட்டம்- வச்சிரபோதி வருகையை அறிவித்தல்].

மந்திரி 1 : அரசே ! நாட்டில் எங்கும் பஞ்சம், பசி ! மக்கள் வாடுகிறார்கள். கடிகாவில் உள்ள புலவர்கள் எல்லாம் நாட்டை விட்டுச் சென்றுவிட்டார்கள். அவைப் புலவர் தண்டியும் நாளை புறப்படுவதாகக் கேள்வி.

அரசர் : அமைச்சர்களே ! நானும் நாட்டின் நிலை அறிவேன் ; இடைவிடாது நம் நாடு போரில் ஈடுபட்டதால் கருவூலம் காலியாகிவிட்டது. பகைவர்களோ நாட்டின் எல்லையில் இடைவிடாது தொல்லைகொடுக்கிறார்கள். நமக்குக் கிடைக் கின்ற உதவியையும் தடுக்கின்றார்கள். என்ன செய்வது என்றுதான் இன்று அரசவையைக் கூட்டினேன்.

சேனாபதி : அரசே ! அந்தச் சாளுக்கியர்கள் பூண்டோடு அழிந் தால்தான் நாம் நிம்மதியாக இருக்கலாம். பலமுறை தோற்கடித்தோம் ; பயனில்லை. மானம் கெட்டவர்கள்.

அரசர் : சேனபதி ! போர்செய்துதான் நாடு இந்நிலைக்கு வந்து விட்டது. போரால் எவ்வளவு பொருள் வீணுகிவிட்டன. போரால் மக்கள் படும் துன்பம் எவ்வளவு? கணவனை இழந்து தவிக்கும் காரிகை ; தந்தையை இழந்து தவிக்கும் தனயன் ; மகனை இழந்து தவிக்கும் பெற்றோர்கள், இவர் களை எண்ணிப்பார் ! புண்ணிய நிலையங்களான திருக் கோயில்கள் பாழ்படுகின்றன. போரின் விளைவை நினைத் தாலே நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறது. இனி நான் போர் செய்யக்கூடாது என்று உறுதி செய்துவிட்டேன்.

அமைச்சர் 2 : அரசே ! அப்படியானுல் நாம் அவர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டால் என்ன ?

அரசர் : விக்கிரமாதித்தனைப் பொறுத்தமட்டில் சமாதானம் பயன் அற்றது. எத்தனைமுறை சமாதானம் செய்தோம். அவர்களுக்காக நாம் எத்தனைமுறை வல்லரசுகளிடம் பரிந்து பேசினேம். உணர்ந்தார்களா ? இல்லையே ! சமாதானக் கரம் நீட்டுகின்றனர். அதேநேரத்தில் எல்லைக் கோட்டைத் தாண்டுகிருர்கள் ; கயவர்கள். அவர்களைக் கயிலைநாதன்தான் கேட்கவேண்டும்.

(ஒற்றர் வருகை).

காவலன் : அரசே ! சாளுக்கியநாட்டில் இருந்து ஒற்றர் வந்திருக்கிருர்.

அரசர் : வரச்சொல்.

(ஒற்றர் வருகை).

ஒற்றன் : வணக்கம் ! அரசே, சாளுக்கிய மன்னன் விக்கிர மாதித்தன் இறந்துவிட்டார். அந்தநேரத்திலும் மகன் விநயாதித்தனைக் கூப்பிட்டுப் பழிக்குப்பழிவாங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அரசர் : (சிரித்துக்கொண்டே) அமைச்சர்களே ! கவலை வேண்டாம் ; விநயாதித்தன் விநயம் தெரியாதவன். போருக்கு உறுதியாக வரமாட்டான். விநயாதித்தன் பட்டம்

ஏற்பது பற்றிக் கவலே இல்லே. நாளேயே நம் எல்லேயைப் பலப்படுத்துங்கள். அயல்நாட்டில் இருந்து உணவுகளேக் கொண்டுவாருங்கள். நம் நாட்டிலும் உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள். தொழில்கள் வளரவேண்டும். அதற்கு வேண்டிய உருவான திட்டத்தைத் தயார் செய்யுங்கள்.

அமைச்சர் 2 : அரசே! வச்சிரபோதி என்ற முனிவர் நாளே நம் நாட்டிற்கு வருகிருர். அவரை மழை வேண்டிப் பிரார்த்தனே செய்யச் சொல்லலாம் என்று நினேக்கிறேன்.

அமைச்சர் 3 : அவர் பௌத்தப் பெரியாராயிற்றே !

அரசர் : யாராய் இருந்தால் என்ன? மக்களின் துன்பம் நீங்க வேண்டும். நாளே அவரை அமோகமாக வரவேற்றுப் பிரார்த்தனேகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளேச் செய்யுங்கள்.

அமைச்சர் 2 : நல்லது அரசே ! (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

திருப்பூர் அருள்நெறி வழிபாட்டுத் திருக்கூட்டத்தாராகிய நாங்கள் தொண்ணூறுபேர்கள் இரண்டு பஸ் மூலமாக இன்று இரவு 7 - 45 மணிக்கு இந்த ஆலயத்துக்கு வந்துசேர்ந்தோம். இந்த ஆலயத்திலுள்ள மூர்த்திகளும், எழுந்தருள் விக்கிரகங்களும் நன்ருக அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தரிசிக்கும் பாக்யம் இன்று எங்களுக்குக் கிடைத்ததை யாவரும் பாக்கியமாக எண்ணுகிருேம். எங்களே அன்போடு வரவேற்ற சுவாமிகள் அவர்களும் சிவாசாரியரும், ஆபீஸ் நிர்வாகிகளும் எங்களுக்கு இந்த ஆலயத்தின் சிறப்பைப்பற்றி விளக்கிக் கூறிஞர்கள், ஓதுவாமூர்த்தியும் நல்ல இனிமையாகப் பாடி மகிழ்வித்தார்கள். இவர்கள் அனேவர்க்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

தங்கள் அன்புள்ள அடியேன்,

(ஒ - ம்) ஏ. சி. பழனிசாமி,

16—8—60. காரியதரிசி.

உடல் வளர்க்கும் மூலிகைகள்

கடலூர், V. பலராமையா B. A., B. L.,

(மலர் 20, இதழ் 2, பக்கம் 114 இன் தொடர்ச்சி)

வேம்பின் பூ :

இப்பூவை எடுத்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும். எவ்வளவு பழமையாகிறதோ அவ்வளவும் நல்லது. இப்பூவை நெய்யில்வறுத்துப் பொடிசெய்து ரசத்திலும் சட்டினியாக அரைத்தும் சாப்பிட வயிற்றிலுள்ள பூச்சிகள் கொல்லப்பட்டு உஷ்ண சாந்தியுண்டாகும்.

வேம்பின்கொழுந்து :

இக்கொழுந்தை நாற்பதுநாட்கள் காலையில் ஒரு வேருகடி சாப்பிட்டுவர பல வியாதிகள் நம் உடலை விட்டு விலகும். குழந்தைகளுக்குப் பிறந்த பதினொருவது நாளிலிருந்தே வயதிற்குத்தக்கபடி கொஞ்சம் சீரகம், இக்கொழுந்து ஒரு சிடிகை வைத்து சன்னமாய் அரைத்து சிசுக்களுக்கு ஒரு சன்ன துணியில் கட்டி தாய்ப்பாலில் நனைத்து சிறுகப் பிழிந்து கொடுத்துவர, வைசூரி வரவேவராது. கரப்பான், மாந்தம், கல்லீரல் முதலிய வியாதிகள் அணுகவே அணுகாது. ஆறுமாதங்கட்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மூன்று மிளகு, இரண்டு வெள்ளைப்பூண்டு பற்கள், மேற்சொன்ன கொழுந்துடன் அரைத்து வென்னீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

வேம்பு எண்ணெய் :

இந்த எண்ணெய் உடலிலுள்ள உஷ்ணத்தைக் குறைக்கும். ஜன்னிகண்டவர்களுக்கு உச்சித் தலையிலும், பாதங்களிலும் இதைத்தேய்த்துவிட ஜன்னி குணமாகும். இதைச் சாதாரணமாக பல பாகங்களில் நல்லெண்ணெய்க்குப் பதிலாக தலைக்கும்

உபயோகப்படுத்துகிறார்கள். கடும் வெயிலில் வேலை செய்பவர்கள் இவ் எண்ணெயை தலையில்வைத்து வேலைசெய்ய வெயிலின் உஷ்ணம் சரீரத்தைத் தாக்குவதில்லை. இந்த எண்ணெயுடன் மற்றும் சில சரக்குகளைக் கூட்டி தைலம் செய்து குழந்தைகளுக்குக் காணும் மாந்தம், இழுப்பு, ஈரல், குலைக்கட்டிகளுக்குக் கொடுப்பது பெருமுறை. அதேபோல் பட்சவாதம், கீழ்வாதம் முதலிய வாதப் பிணிகளுக்கு உள்ளுக்கும் மேற்பூச்சாகவும் உபயோகித்து பலன் பெற்றுள்ளனர்.

25. தூதுளை

இது ஓர் முள்நிறைந்த கொடி. வேலிகளில் படரும். வீட்டின் தோட்டத்திலும் பயிரிடலாம். இதன் பழம் சிகப்பாய் சுண்டைக் காயளவு இருக்கும். இலையிலும் முள் இருக்கும். இதன் விதையைப் போட்டால் செடிகள் உண்டாகும். கிளையைவெட்டி வைத்தாலும் துளிர்க்கும். இதன் பெருமையை அரியாதாரே தங்கள்பங்களாக்களில் உதவாச்செடிகளைப்பயிரிடுவர். மருந்துக் கடைகளில் கிடைக்காது. வேர்வெட்டிகள் மூலியமாய் சுலபமாய்ப் பெறலாம்.

குறிப்பு :- இதில் கருவங்கசத்து உள்ளது.

உபயோக முறை :

இதன் இலையைமாத்திரம் பறித்து நிழலிலுலர்த்தி பொடி செய்து வஸ்திரகாயம் செய்து ஒரு சிடிகை முதல் இரண்டு சிடிகை வரை தேனில் குழைத்து ஒரு மண்டலம் உண்ண தொண்டையில் (Bronchitis, Pharanjitis) முதலிய கபத்தால் உண்டாகும் வியாதிகள் நிச்சயமாய் குணமாகும்.

மற்றும் இந்த இலையை விளக்கெண்ணெயில் வதக்கி கொத்தமல்லிசட்னி செய்வதுபோல் துகையல் செய்து சாப்பிடலாம். புளிக்குப்பதில் எலுமிச்சம்பழரசம் சேர்த்துக்கொள்ளுதல் நலம். கண்டங்கத்திரி இலை சூரணத்துடன் சம அளவு கலந்து தேனுடன் கொடுத்து சுவாசகாசத்தில் பலன் கண்டிருக்கிறேன்.

இதன் காயை வெள்ளி (அ) தாம்பிரஃதச்சியால் குத்தி புளித்தமோரில் வேண்டிய உப்பிட்டு காய்களை அதில் இரண்டு நாள் ஊரவைத்து பிறகு எடுத்து ரவியில் உலர்த்தி மறுபடியும்

முன்போலவே மோரில் ஊரவைத்து உலர்த்தி எடுத்துவைத்துக் கோள்ளவும். சுண்டக்காயை உபயோகிப்பதுபோல் இதைத் தேங்காயெண்ணெயில் பொறித்து உபயோகிக்க பல நாட்களாக அவஸ்தைப்படும் சர்மவியாதிகள் (Skin deseass) குணமாகும்.

26. அறுகம்வேர்

காராண கல்மிஷங்களேல்லாம் தீரக்
 காயான மூலிகையிலோன்று கேளு
வீரான வருகம்புல் விஷத்துக்கெல்லாம்
 விஷமான மூலிகை தானேயாவையா
கூராகப் பிடுங்கியதை யரைத்துருட்டிக்
 கோண்டு கடிவாயிலதைப் பூசிவிட்டால்
நேராகத் தீருமேன்று முன்னோர் சோன்ன
 நிசமான சிவமூலி குணமிதாமே. (இராமதேவர்)

இதில் வெள்வங்க சத்துள்ளது. இதற்கு முதண்டமேன்றும் பேயர். அறுகம்புல் அறியாதார் இல்லை. இதனுடைய கற்பக குணமறிந்தே விக்னேசுவரர் தலையில் அறுகம்புல் தூவுகின்றனர்.

உபயோகம்:

இதன் முற்றிய வேர்களைக் கோண்டுவந்து கணுக்களை மாத்திரம் வேட்டி அகற்றி நிழலிலுலர்த்தி இடித்துத் தூளாக்கி இதனுடன் நன்னாரிவேர், பரங்கிப்பட்டைவேர், கோத்தமல்லி சம எடை, கோஞ்சம் தோல் சீவிய சுக்கு இவைகளை இடித்துச் சேர்த்துக் காபி போடிக்குப் பதிலாகத் தண்ணீரிலிட்டு நன்றாகக் கோதிப்பித்துக்கற்கண்டுதூள்பால்சேர்த்துச்சாப்பிட்டுவரதுர்நீர்ப் பிரிந்து நீரடைப்பு வியாதியால் அவஸ்தைப்படுவோர்க்குச்சஞ்சீவியாகும். சரீரகாந்தியுண்டாகும். இந்த வேரிலிருந்து முதண்ட லேகியம் சேய்து சாப்பிடுவது உண்டு.

27. ஆகாசகருடன் (அந்தரகருடன்)

இதில் தாம்பிரசத்துள்ளது. கோடி இனத்தைச் சேர்ந்தது. இதன் கிழங்கு பேரியதாயிருப்பதை எடுத்துப் பார்த்தால் கருடனைப்போலவே ருபத்தில் இருக்கும். இதன் கிழங்கே உபயோகம்.

இது ஒரு சித்தர் மூலி. இக்கிழங்கைக் கயிற்றில் கட்டித் தொங்க வைத்தால் தானுகவே படர்ந்து உயிர்வாழும். தண்ணீரில்லாமல் காற்றிலுள்ள பிராணவாயுவை உண்டு வாழும். இது வெகு கசப்புடையதாகும். வேர்வெட்டிகள் மூலம் பெறலாம்.

உபயோகம் :

இக்கிழங்கை சிறு துண்டுகளாக வெட்டி நிழலிலுலர்த்தி பொடிசெய்து ஒரு சிடிகை நெய்யும் தேனும் சேர்த்து காலே மாலே உண்ண, உண்ண உடலிலுள்ள விஷமெல்லாம் பரந்து ஓடும். மூன்று மாதங்களுண்ண குஷ்டம் குணமாகும். சர்ப்பம் முதலிய விஷ ஜந்துக்கள் தீண்டினுல் விஷமேருது. சர்ப்பம் தீண்டியவுடன் இதன் கிழங்கில் நெல்லிக்காயளவு அரைத்து உள்ளுக்குத்தர உடனே விஷமிறங்கும். கருடனைக்கண்டால் எப்படி பாம்பு அலறுமோ அதேபோல் கருடக்கிழங்கை கண்ட மாத்திரத்தில் விஷம் பறக்கும். அதனுலேயே இதற்கு கருடக் கிழங்கு என காரணப்பெயர் உண்டாயிற்று.

இது மருந்துக்கடைகளில் அநேகமாகக் கிடைக்காது. வேர் வெட்டிகள் மூலம் பெறலாம். (தொடரும்)

வரமருள்வாய்

ஈழநர். க. உமாமகேசுவரன்

இராகம் - ஷண்முகப்ரியா] [தாளம் - ஆதி

பல்லவி

வரமருள்வாய் வடிவேற் குமரா
வந்தனே செய்துநான் உன்றனே வணங்கிட (வர)

அநுபல்லவி

அரவணைத் துயில்கோளு மரிதிரு மருகா
அம்பல வாணருக் கறம்அருள் முருகா (வர)

சரணம்

சரவணத் தடத்தினிற் சார்ந்திடுஞ் சீலா
சங்கரன் மகிழுமை தருஞ்சிவ பாலா
கிரவுஞ்ச கிரிதனைக் கிழித்தருள் வேலா
கீரனுக் கருளுமென் கீர்த்தன லோலா (வர)

‘ தாமரைத் தவிசு ’

வித்துவான்
ப. நீலா

‘ வான் பொய்ப்பினுந் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும் ’

என்று கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாராட்டப்பெற்ற பொன்னியாற்றினால் பெருமை படைத்தது சோழநாடு.

‘பொன்னித் திருநாடே புவிக்குத் திலகம் ’ என்று சேக்கிழார் சுவாமிகளால் பாராட்டப்பெற்றதும், சோழவள நாடுதான். இத்தகைய சோணாட்டிலும் தொண்டை, நடு நாடுகளிலும் இயற்கை எழில் நிறைந்த காட்சிகளுக்கு என்றுமே பஞ்சம் இருந்ததில்லை. நடு நாட்டில் பிறந்து, தெய்வப் புலவர் சேக்கிழார்சுவாமிகளால் ‘ துரிசறு நற்பெருந்தொண்டர் ’ என்று பாராட்டப் பெறுகின்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் அப்பொழுது தொண்டைநன்னாட்டில் சுற்றுலா செய்து கொண்டிருந்தார். திருவொற்றியூரில் சாருந்தவத்துச் சங்கிலியை, - இருந்தவத்துக் கொம்பை - மணந்து மகிழ்ந்து சிலகாலம் தங்கியிருந்தபின்னர் அவர் உள்ளம் திருவாரூர்த் தியாகேசனை நினைந்து உருகியது. ‘ எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே ’ என்ற உணர்வு உள்ளத்தில் எழுந்ததும் சங்கிலிக்குச் செய்துகொடுத்த சபதத்தையும் மறத்து ஒற்றியூரைவிட்டுப் புறப்பட்டார். ‘ எக்காரணத்தாலும் ஒற்றியூர் எல்லைகடவேன் ’ என்று மகிழின்கீழ் செய்த சபதத்தை மீறியதால் இருகண்ணையும் இழந்தார்

ஊன்கண் மறைந்தாலும் உளக்கண்ணால் பெருமானைக் காணலாம் என்ற ஊக்கத்துடன் அடியார்கள் வழிகாட்ட ஆரூரர் செல்கின்றார். வடதிருமுல்லைவாயிலில் வழிபாடு நடக்கின்றது. உள்ளமுருக இறைவனை வேண்டி வழிபடுகின்றார்.

திருமுல்லைவாயில் உறையும் செல்வனே! திருவும் மெய்ப்பொருளும் எனக்கு உன் சீருடைக்கழல்கள் தாமே! தண்பொழில் ஒற்றிமா நகருடையாய்! சங்கிலிக்காக என் கண்கொண்ட பண்பனே! வள்ளலே! குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால் மிகைபல செய்தேன். அடியேன்

பற்றிலேன் எல்லியும் பகலும் பணிசெய்வேன். நாயினேனுகிய என்னை அன்று வெண்ணெய் நல்லூரினில் ஆட்கொள்ள வில்லையா? பன்னலம் தமிழாற் பாடுவேற்கு அருள்செய். சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையினுல் கட்டி எல்லையற்ற இன்பம் அவன்பெற வெளிப் பட்டு அருளியவனே! பல்கலைப்பொருளே! படுதுயர்களையாய்! பாசுபதா! பரஞ்சுடரே! என்று திருநாவலூரர் வேண்டுகின்ருர்.

இந்நிலையில் தொண்டைநாட்டின் எழில்மிக்க சூழலில் அமைந்துள்ள திருமுல்லைவாயிலின் வளத்தையும் வாயாரப் பாராட்டுகின்ருர்.

பொன்னலம் பொலியும் செந்நெல்அம் கழனியில் பொறிவரி வண்டுகள் (வயிறும், மனமும் நிறைந்த இன்பத்தில்) பாடுகின்ற இசையில் இன்பங்கொண்டு நண்டு ஒன்று கமலத்தவிசில் உறங்குகிறது. உறங்கிய நண்டு பின் உலவுகின்றதாம்.

'பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசைபாட
அந்நலங்கமலத் தவிசின்மேல் உறங்கும் அலவன் வந்துலவிட அள்ளற
செந்நலங் கழனிசூழ் திருமுல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலம் தமிழாற் பாடுவேற்கருளாய் பாசுபதா பரஞ்சுடரே!

என்று தளராததமிழ்ப்பாவால் வளமுடைய தொண்டைநாட்டைப் பாடுகின்ருர் வன்றொண்டர். தொண்டைநன்ருடு சான்ருேர் உடைத்து - அல்லவா! திருத்தக்கதேவர் காட்டுகின்ற தக்க நாட்டில் - அலவன் ஒன்று அதேதுறையில் வாழும் கன்னி வாளையின் உடலினைத் தனது நகத்திஞல்தீண்டியது. அவ்வளவு தான் - கன்னிவாளை ஊண்துறந்து ஒடுங்கிவிட்டதாம் - காட்சி சீவக சிந்தாமணியில்,

வண்டுவாழ் கொடுந்துறைக் கன்னி வாளைமேல்
நண்டுகிருற்றென நடுங்கி நாணிஞல்
விண்டொளித தூண்துறந் தொடுங்கும் வீழ்புனல்
கொண்டபூங் கிடங்கணி நகரம் கூறுவாம்.

என்று அலவனையும் - வாளையையும் கொண்டு அழியாத சித்திரம் ஒன்றைத் தீட்டுகின்ருர் திருத்தக்கதேவர்.

காக்கையைப்பாடிய நச்செள்ளையார் அலவனைப்பற்றிப் பதிற்றுப்பத்தில்

'வண்டிறை கொண்ட தண்கடற் பரப்பின்
அடும்பம லடைகரை யலவ ஞடிய
வடுவடு நுண்ணயிர் ஊதை யுஞற்றும்' —பதிற்று 51

என்கிறார். அலவன் மணலில் நடந்துசென்ற சுவட்டினை அலையாலும் காற்றாலும் எறியப்படும் நுண்மணல் பரந்துமறைக்கின்றது என்கிறார்.

தாமரைத் தவிசில் - செந்திருவும், அன்னத்தின் அருங்குழவியும் உறங்குகின்றன. கம்பர் காட்டுகிறார். நீரில் சங்கமும் நிழலில் மேதியும், தாரில் வண்டும், தாமரையில் செய்யவளும், தூரில் ஆமையும், துறையில் இப்பியும், போரில் அன்னமும், பொழிலில் தோகையும் உறங்குவனவாகக் கூறுகின்றார்.

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும்வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை
—பால - நாட்டு 6.

இன்னொரு காட்சி.

சேலைப் பழிக்கும் விழியுடையாரைப்போல் திரிகின்ற செங்கால் அன்னம் - தனது மழலைப்பிள்ளையைத் தாமரைத் தவிசில் கிடத்தியது. சேற்றில் மாட்டிக்கொண்ட மேதி கன்றை நினைந்து சொரியும்பாலைக் குடித்த அன்னத்தின் குழவி - தேரையின் தாலாட்டில் கண்வளர் கின்றது.

'சேலுண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளி கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்தேரை தாலாட்டும் பண்ணை'.
—பால - நாட்டு.

தாமரைத்தவிசில் கண்வளர்கின்ற அலவனையும் அன்னக் குழவியையும் இன்று தெய்வப் புலவர்களின் பாடல்கள் மூலம்

நாம் காண்கின்றோம். புதுமணத் தம்பதிகளாகிய அன்னங்களைத் தாமரைத்தவிசில் அமர்வித்துத் தடாகமாகிய பெண், தனது அலைக் கரங்களால் தாமரை இலையாகிய மரகதத் தட்டில் நீர்த் துளிகளாகிய முத்துக்களைப்போட்டு ஆரத்தி எடுப்பதாகப் பரஞ்சோதி முனிவர் காட்டுகின்றார்.

எழில் நிறைந்த சோழநாடும் தொண்டைநாடும் ஏற்றமிகு தமிழ்க் கவிகளும் என்றும் நெஞ்சைவிட்டு நீங்கா. வாழ்க தமிழ்!

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I came here after a lapse of tweniy years and I find there is vast improvements in the maintanance of the Temple. Every one here are very cordial and helpful to the worshippers and there is perfect solumnity in the atmosphere throughout. My sincere respects to His Holiness Sri La Sri Maha Sannidhanam Avergal Dharmapuram Adhinam.

(Sd.) G. Pattu Aiyer,
Film Director & Actor,
2—10—60 2, First Street, Abiramapuram,
Madras - 18.

It is with very great pleasure that I testify to the fact that I found the entire temple premises, srupulously clean. A spiritual atmosphere prevails everywhere. The temple staffs were extremely courtious and helpful I was more than satisfied with the object of my pilgrimage. Other temples will do well to follow the example and adopt the method for keeping the premises clean.

(Sd.) M. N. Varadarajan,
2—10—60. Lect. in chemistry,
National College, Trichirappalli.

வினைச்சொற்றிறம்

முதுபெரும் புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 2, பக்கம் 92 இன் தொடர்ச்சி)

அல்வழி : 1 தொழில், 2 பண்பு, 3 உவமை 4 உம்மை, 5 அன்மொழி, 6 எழுவாய், 7 விளி, 8 வினையெச்சம், 9 பெயரெச்சம், 10 முற்று, 11 இடை, 12 உரி, 13 தழுவு தொடர், 14 அடுக்கு என ஈரேழ் என்றுதான் அந்நூற்பாவின் அமைப்பிற்குத் தகப்பொருள் கொள்ளல் வேண்டும்.

மயிலைநாதர், ' 1. வினைத் தொகையும், 2 - 5 பண்புமுதல் நான்கும் விரியவும் தொகவும் வருந்தொடர்ச்சியும், 6 - 13 எழுவாய் முதல் ஈண்டுரைத்த எட்டும் தமக்கு ஏற்கும் பெயர் வினைகளோடு தொடரும் தொடர்ச்சியும், 14 விரைவாதியின் வரும் அடுக்கும் ஆன இப்பதினான்கும், அவ்வழிப் புணர்ச்சி எனப்படும் ' என்றுரைத்தார். ' வினையும் வினையுள் அடங்கும் வினைக் குறிப்பும் கொண்டு 'முடிதலின் வினையெச்சமாயின ' (359) என்று எழுதியதற்கு முரணுதல் புலப்படும். ஆண்டு அடங்கும் என்றும் ஈண்டு இருமுற்று என்றும் கொண்டமை முரண். அவர் உரையில், இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்குரிய தனிநூற் பாவில் உள்ளவைபோல இங்கில்லாமை ஏனோ ? இங்கே அவர் ' தழுவு தொடர் ' என்பதையும் பதினான்கனுள் ஒன்றாகக் கொண்டுரைத்திருப்பரேல் இத்தடுமாற்றம் வாராது.

அறுவகை என்று பின்னர் எழுதியதற்கும் நால்வகை என்று முன்னர் எழுதியதற்கும் ஒற்றுமை யாதும் இல்லை.

இலக்கண விளக்க நூலார் நன்னூற்குச் செவ்விதின் உரை கூறப்படாமையைக் கருதி,

'ஐம்முத லாறு தழுவுதொடர் வேற்றுமை
செவ்விதின் நிலையும் எழுவாய் விளிமுற்
றிடையுரி யெச்சம் அடுக்குவமை உம்மை
கழிவுதொடர் அவ்வழிச் சந்தி என்ப'

என்றுரைத்தாரேனும், அதன் உரை இதனின் வேறுயில்லை. இவர்க்கு அடுக்கும் தழுவு தொடராதல் அறிக.

'இரண்டென்பதனை முற்றென்பதனோடும் ஒட்டுக' என்றார் சங்கரநமச்சிவாயர்.

மயிலைநாதர் உரையைப் பெரும்பாலும் மறுத்துரைக்கும் சங்கரநமச்சிவாயர் இங்கு அவர் போக்கையே ஒட்டியுரைத்தது வியப்பேயாம்.

இருவரும் 'பாடங்கருத்தே.........ஈரேமூரையே' என்புழிப் போலத் திட்டமாகப் பதினான்கு அமைந்தவாற்றை விளக்கின ரல்லர்.

தெரிநிலையும் குறிப்புமாகிய பாகுபாட்டை முற்றிற்கு மட்டும்கொண்டு, ஈரெச்சத்திற்கும் கொள்ளாமை குற்றம் ஆகும். தெரிநிலையும் குறிப்பும் எச்சங்கட்கும் உண்மையை உணர்ந் திருந்தும் அவற்றிற்கு அப்பாகுபாட்டைக் கொள்ளாது தள்ளி முற்றிற்கு மட்டும் கொள்ளல் 'பதினான்கு' என்னும் எண்ணைச் சரிக்கட்டற்பொருட்டேயாகும். ஆதலின், அது குன்றக்கூறல் என்னும் குற்றம் ஆயிற்று. இங்கு இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கே வரலாறு உண்டு. அது பிழைபோலும். அது பண்பை விளக்கும் மொழி தொக்கனவும் ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை என்பது. அங்குக் 'கருஞ் சாத்தன்' 'தண்ணீர்' 'நறுமலர்' 'தீம்பால்' 'குறுங் கொற்றன்' 'வட்டக்கல்' உள்பொருள்' 'இல் குணம்' எனப் பண்புத் தொகைக்கும் 'கேழற்பன்றி' 'வேழக் கரும்பு' 'அளகை நகர்' 'ஆனித் திங்கள்' 'அகரமுதல்' 'சகரக் கிளவி' என இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கும் காட்டி அவற்றினை விரித்துரைத்தார்.

'கருஞ் சாத்தன் என்பது கரிய சாத்தன் என இருதிணை யைம்பாற்கும் பொதுவாகிய பெயரெச்சக் குறிப்பு வாய்பாட்டான்

வீரியும். இவ்வாறு அன்றிக் கரியதேனின் அஃறிணை யொருமைக்கே உரிப் முற்ருய்த் தொகா நிலையாம் என்க. இனிப் பண்பாவது பொருட்குணமாதலின், அப்பொருட்கு உரிமை தோன்றக் கருமையையுடைய சாத்தன் என்பாருமுளர். அவையும் அறிந்துகொள்க.'

'வேழற்பன்றி முதலானவும் சாதி தொக்க பண்புடைமையின் ஈண்டு வேண்டினுர் என்க.'

' பண்புக்குத் தொக்கு நின்றது கருமை என்ற ஐகாரம் '

' இனி, தொல்காப்பியனுர்க்குக் கரியன் என்ற அன்னீறு தொக்கு நின்றது ' (தொடரும்)

ஒரு வேண்டுகோள்

'ஞானசம்பந்தம்' இதழின் ஆண்டுக்கட்டணம் மாற்றம்

அன்புடையீர்! வணக்கம், தங்களது ஒத்துழைப்பால் "ஞானசம்பந்தம்" பெருகி வளர்ந்து இருபதாம் ஆண்டு நடைபெறுகிறது. இவ்விதழின் ஆண்டுக் கட்டணத்தை 1-1-1961 முதல் உள்நாடு ரூ. 2-25 வெளிநாடு ரூ. 3-00 என்று மாற்றியுளோம். சந்தாதாரர் அனைவரும் இம்மாற்றத்தை ஏற்று, மேலும் எங்களோடு ஒத்துழைத்துப் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவவேண்டுகிறோம். சந்தா செலுத்த விரும்புவோர் கீழ்க்காணும் இடங்களில் சந்தாத் தொகையைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

1. சமயப் பிரசார நிலையம்
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை.
2. இராம. கனகசபாபதிப் பிள்ளை
   கம்பராமாயணத் தெரு, திருநெல்வேலி.
3. ம. க. சுந்தரேச பட்டர்
   மீனுட்சிசுந்தரேஸ்வரர்கோயில் ஆசிருதம், மதுரை.

குறிப்பு: ஏனைய இடங்களில் எங்கள் ஏஜெண்டுகளாக எவரும் இலர்.

— செயலாளர்.

சென்னை மாநில ஆளுநர், மேன்மைதங்கிய

கனம். ஸ்ரீ. விஷ்ணுராம்மேதி அவர்களுக்கு

வாசித்தளித்த வரவேற்புரை

இறைவன் திருவருள் இன்ப ஊற்று. அந்த ஊற்றுப் பெருக்கெடுக்கும் ஞானப் பொய்கைகளே திருக்கோயில்களும், திருமடங்களும். இத் தருமையாதீனம் ஞானபுரியாக விளங்குவது. இங்கே இறையருள் தருமநெறியில் தருமபுரீசனுகவும், குருவருள் நெறியில் ஞானபுரீசனுகவும், அருள் உருவில் மகாலட்சுமி துர்க்காம்பிகையாகவும் திருக்கோவில்கள்கொண்டு திருவருள் பாலிக்கிறது. இவ்வாறு தருமமும், ஞானமும், அருளும் கொழிக்கும் இந்தத் தலம் தவச் சூழ்நிலைக்கேற்ற மோனநிலை உடையது. தனது அகண்டமான வடிவத்தை ஒடுக்கிக்கொண்டு, பராசக்தியின் கருணையைப்போலப் பெருகி ஓடும் காவிரியாற்றின் கரையில், அமைதிகொழிக்கும் சோலைகளுக்கிடையில் இந்த ஞானுசிரமம் தன் பணிகளைச்செய்து வருகிறது. இறைவனின் விருப்பத்துக்குகந்த இந்த இடம் ஒரு அமைதிப் பூங்கா. பரபரக்கும் மனித சமுதாயத்தைப்பார்த்துப் பரபரக்கவேண்டாம் அமைதியாயிரு என்று உபதேசித்த குருநாதரை முதல்வராகக்கொண்ட இவ்வாதீனத்தின் அருள்நிழலில் வாழும் எங்களுக்குத் தங்களைப்போன்ற பேரறிஞர்களின் வருகையும், அறிவுரைகளும், செவிக்கும், சிந்தைக்கும் நல் விருந்தாகின்றன. தவச்சான்றோர் வழிநின்று அரசியற்றுறையிலும் ஆஸ்தீக மனப்பாங்கு வாய்ந்த தங்களை வருக, வருக என்று வரவேற்பதில் பெருமைகொள்கின்றோம்.

நாட்டிற்குத் தாங்கள் செய்துள்ள சேவைகள் இந்நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவை. சுதந்திரம் பெறுதற்கு முன்பு அதனைப் பெறும்சிறப்பிற்காகவும், பேற்றபின்பு அதனைக்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்கு 25-11-60 இல் வருகைதந்த சென்னைமாநில ஆளுநர் மேன்மைதங்கிய கனம். ஸ்ரீ. விஷ்ணுராம்மேதி அவர்களுக்குத் தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் - மாணவர்களும் வாசித்தளித்த வரவேற்புரை.

காக்கும் பொறுப்பிற்காகவும் தாங்கள் ஆற்றிய, ஆற்றிவரும் பணிகள் எல்லோரும் போற்றும் சிறப்புடையவை. 'ஆளுவோர் தாம்சேவைபுரிவோர் என்னும் உணர்வுடன் இருக்கவேண்டும்' என்ற உலக உண்மைக்குத் தாங்கள் சீரிய உதாரண புருஷராக விளங்குகின்றீர்கள். நாள்தோறும் தாங்கள் நாட்டு நலனுக்கென எண்ணியும், பேசியும், செயலாற்றியும்வருகின்றீர்கள். மகாத்மா காந்திஜி கூறியபடி சேவை என்பது மனமொழி மெய்களோடு கூடியதாக இருத்தல்வேண்டும் என்பதற்கும் தாங்கள் சீரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றீர்கள். பல நூல்களையும் கற்றுத் தெளிந்த நல்லறிவைத் தங்களிடம் காண்கின்றோம். அத் தெளிவின்வழி அடக்கத்துடன் திகழும் தங்கள் வாழ்வு சமுதாயத்திற்கே ஒரு முன்மாதிரியாகும். கற்றதனாலாகிய பயன் இறைவன் திருவருளை மறவாமை என்று கண்டது இப்பாரதத் திருநாடு. தங்கள் தெய்வபக்தி உலகுவியந்து பாராட்டும் திறம் உடையது. இவ்வாறு சீரிய வாழ்வுடைய தாங்கள், சென்ற ஆண்டில் இந்த மாவட்டத்துக்கு வந்தபோது தருமையாதீனக் கோயில்களில் திருவையாறு, வைத்தீஸ்வரன்கோயில், திருக் கடவூர் ஆகிய திருக்கோயில்களை வழிபட்டு மகிழ்ந்து உருகி நின்ற செய்தி இன்றும் எம் நெஞ்சை மகிழ்விக்கின்றது. இத்தகு அருள்நாட்டம் உடைய தாங்கள் இவ்வருள் தலத்துக்கு வருகை புரிவது மிகப் பொருத்தமே என மகிழ்கின்றோம்.

ஆஸ்திகநெறி பிறழாத தங்களது நிர்வாகத்திறம் பாரத நாட்டிற்குப் பல நலங்களை விளைத்திருக்கிறது என்பது உலகு உணர்ந்த உண்மை. சென்னை இராஜ்யம் தங்களை ஆளுநராகப் பெற்றதனால் இத்தென்னாடு பல பெரும் நன்மைகளைப் பெறலா யிற்று. காந்தீயத்தில் உறுதியான பற்றுடைய தங்களை இரும்பு மனிதர் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமே. கொண்ட கொள்கைகளில் இரும்பு மனிதராகவும், அதேவேளையில் இனிய நற்பண்புகளால் கரும்பு மனிதராகவும் திகழும்தங்களை வரவேற் பதிலும், வாழ்த்துவதிலும் மிக்க பெருமிதம் அடைகின்றோம்.

இத்தருமையாதீனம் கல்விப்பணிகள், சமயப்பணிகள், சமூகப்பணிகள் முதலிய பல பணிகளைச் செய்துவருகிறது. தமிழ்க்கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி, தேவாரப் பாடசாலை, வேதசிவாகம பாடசாலை, அநாதைக் குழந்தைகள் இல்லம் ஆகிய பல நிலையங்களையும், 27 கோயில்களையும்

பரிபாலித்துவரும் இவ்வாதீனத்தின் 25 ஆவது குருமகா சந்நிதானமாக வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இவற்றோடு இமாலயப் பெரும் யாத்திரைகளையும் முடித்துள்ளார்கள். சென்ற ஆண்டில் இவர்கள் முடித்தருளிய மகாகயிலாய யாத்திரை, திருக்கயிலாயபரம்பரையில் வந்தது இந்தத்திருமடம் என்பதைக் கண்கூடாக உலகிற்கு மெய்ப்பித்துக் காட்டிய பெருஞ்செயலாகும்.

காந்தீயவழி நிற்கும் தாங்கள், சைவசித்தாந்தச் சாத்திர தோத்திர வழிநிற்கும் இத்தருமையாதீனத்திற்குப் போந்தகாலை தங்கள் அனுபவமும் அறமும் கலந்த அறிவுரையமுதை எங்களுக்கு வழங்கவிருப்பது எங்கள் நல்வாய்ப்பாகும். வருக! வருக!! வருக!!!

நவமணிமாலை கீர்த்தனை

வித்துவான், திரு. ப, இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

இராகம் : பிஹாக்] [தாளம் : ஆதி

பல்லவி

அம்பிகையே தாயே — ஜெக
தம்பிகையே தாயே — லக்ஷ்மி துர்க்கா (அம்பிகை)

அநுபல்லவி

நம்பியே கேட்டவர் — நானிலத்திலில்லை
கும்பிட்ட கைக்கோரு — குறையும் வராதே (அம்பிகை)

சரணம்

சம்பு சரீரத்தில் — சரிபாதியானாய்
அம்புவி தனையுண்ணும் — அரிமார் பமர்ந்தாய்
அம்புயத்தில் உதித்தான் — அவன் நாவமர்ந்தாய்
தண்புனல் வளமிகு — தருமையமர்ந்தாய் (அம்பிகை)

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி - கால்கோள் விழா

சார்வரி ஆண்டு தைத்திங்கள் 16 ஆம் நாள் (29—1—61) ஞாயிற்றுக்கிழமை காலை 10 - 30 மணிக்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்திற்குத் திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அஸ்திவாரக்கல்லை நாட்டியருளினார்கள். இவ் உயர்பள்ளிக்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலவருவாயைத் தானசாசனம் செய்திருப்பது எல்லோரும் அறிந்ததே.

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்துக்கு உரிய இடத்தை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் உயர்பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இனமாக வழங்கியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காலை 6 மணி சுமாருக்குத் தருமையிலிருந்து திருப்பனந்தாளுக்கு எழுந்தருளினார்கள். திருப்பனந்தாளில் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தை வரவேற்றுக் கொலுவிருத்தி வழிபாடாற்றினார்கள்.

பின்னர் ஸ்ரீ அருணஜடேசுவரரைத் தரிசித்து உயர்பள்ளிக் கட்டடக் கால்கோள் விழாப் பந்தலுக்கு எழுந்தருளினார்கள். பலவிடங்களில் மக்கள் தங்கள் அன்பையும் பக்தியையும்

வேளிக்காட்டும் முறையில் பூர்ணகும்ப மரியாதையுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்றனர்.

கடவுள் வணக்கத்துடன் விழாத் தொடங்கியது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை வரவேற்று, தருமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பொதுநலப்பணிகளையும், கல்விப்பணி களையும், அறப்பணிகளையும் பாராட்டி அவற்றின் நினைவாக இப்பள்ளி தொடங்கப்படுகிறது என்று தெரிவித்துப் பள்ளியின் அஸ்திவாரக்கல்லை நாட்டியருளுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பிரின்ஸிபால், சிவநெறிச்செல்வர், வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா M.A.,B.O.L., அவர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை உயர்பள்ளிக் கட்டட அஸ்திவாரக்கல்லை நாட்டியருளு மாறு பிரார்த்தித்தார்கள். அன்பர்கள் பலர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

உயர்பள்ளிக் கமிட்டி பிரஸிடேண்ட், திரு. T. M. சடையப் பிள்ளை அவர்களும், சாக்கோட்டைமில் அதிபர் திரு. G. கோபால் செட்டியார் அவர்களும், செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள் சார்பில் பிரின்ஸிபால், வித்வான், திரு. K. M. வேங்கடராமையா அவர்களும், மேற்படிகல்லூரிப்பேராசிரியர் திரு. தா. ம. வேள்ளை வாரணம் அவர்களும், பஞ்சாயத்துப்போர்டு பிரசிடேண்ட் திரு. N. இராசுப் பிள்ளை அவர்களும், உயர்தொடக்கப்பள்ளி சார்பில் தலைமையாசிரியர் திரு. R. சிவப்பிரகாசம் அவர்களும், திருப்பனந்தாள் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் திரு. T. M. சடையப்பிள்ளை அவர்களும், திருப்பனந்தாள் முஸ்லீம்கள் சார்பில் திரு. ஜனுப்ஜலாலுடீன் அவர்களும், மட்டியூர் துவக்கப் பள்ளி ஆசிரியர்களும் வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.

சினிமாக்கோட்டகை ப்ரோப்ரைட்டர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், கூட்டுறவு விவசாயப்பண்ணை சார்பில் திரு. கோணேசம் பிள்ளை அவர்களும் பூமாலையைச் சமர்ப்பித்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் கனகாபிஷேகவிழாக் காரியதரிசி திரு. V. இராமநாத அய்யர் அவர்கள் கனகாபிஷேக

விழாவைப்பற்றிக் கூறி அவ்விழாவிற்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் வழங்கிய நன்கொடையையும் பாராட்டிப்பேசினார்கள். குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக்கழகச் செயலாளர், திரு. K. கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை அவர்கள், ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமணி யவர்கள் கயிலாய மலையைத் தரிசித்தவர்கள். இப்பள்ளியும் கயிலாய மலைபோல் உயர்ந்து - அம்மலைபோல் நீண்டகாலம் நிலைத்து நிற்கவேண்டும் என்ற பெருநோக்கத்துடன்தான் அவர்களாலேயே கால்கோள்விழாச் செய்யப்பெறுகிறது. அது மிக்க பொருத்தமானது. அவர்கள் ஹஸ்த விசேஷத்தால் இப்பள்ளி கயிலை மலைபோல் நிலைத்துநிற்கும் என்பதில் ஐயம் இல்லை என்றும், உயர்பள்ளிக் கட்டடக் கால்கோள் விழாக் காலத்தில் கருடன் வட்டமிட்டது. இது குமரகுருபரர் ஸ்ரீ காசி யில் மடத்தை நிறுவுவதற்குக் கருடன் வட்டம் இட்டதை நினை வுறுத்துகிறது என்றும், இங்கு முஸ்லீம்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை வரவேற்க இருபத்தைத்து அதிர்வேட்டுகள் போட்டும் வரவேற்புரை வழங்கியும் அழைப்பது ஸ்ரீ காசியில் முஸ்லீம் மதத்து அரசன் ஸ்ரீ குமரகுருபரரை வரவேற்றழைத் ததை நினைவுறுத்துகிறது என்றும் கூறினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிலாசா சனக் கல்லை நாட்டுவித்து வழங்கிய ஆசியுரை:- "நமது கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய அருணந்தித் தம்பிரான் அவர்கள் நமது கேதார யாத்திரையில் நமக்குப் பலவகையிலும் உதவி புரிந்தவர்கள். அவர்களுடைய குருபக்தியை அளவிட்டுக் கூறமுடியாது. தம்பிரான் அவர்கள் பல அறக் கட்டளைகள் நிறுவியிருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒருலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களைத் தருமம் செய்திருப்பது மிகவும் பாராட்டற்குரியது. தம்பிரான் அவர்கள் கல்வி வளர்ச் சிக்காகவும், அன்னம்பாலிப்பிற்காகவும் அறக் கட்டளைகள் ஏற்படுத்திய தர்மசீலர். அவர்கள் தருமவடிவானவர்கள். பரந்த உள்ளம் படைத்தவர்கள். சிவசிந்தனை மறவாதவர்கள். அவர் களுடைய அறப்பணிகள் வளரவும், சைவம் தழைக்கவும், அவர்கள் நீடுழி வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருள் முன்னிற்பதாக. இப் பள்ளி சிறந்து விளங் கவும் திருவருள் துணைசெய்வதாக".

செய்திகள்

* *

குடியரசுதின விழா

தருமபுரத்தில் :

26—1—61 வியாழக்கிழமையன்று ஆதீனக் கல்விநிலையங்களின் சார்பில் குடியரசுதின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை 9 மணி அளவில் கல்விநிலைய மாணவர்களும், ஆசிரியர்களும் ஜெயகோஷமிட்டுக்கொண்டு நாட்டுக் கொடி ஏந்தி வலமாக வந்தனர். கூட்டுறவுப் பண்டகசாலை; ஆதீனம் குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளிலும், ஆதீனப் பல்கலைக் கல்லூரியிலும் மாயூரம் - குமரக் கட்டளை, கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான்சுவாமிகள் அவர்களால் கொடியேற்றிவைக்கப்பட்டது. ஆங்காங்கே நிழற்படமும் எடுக்கப்பட்டது.

பின்னர் ஆதீன மடாலய முகப்பில் குழந்தைகளுக்கு இனிப்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் வழங்கப்பட்டது.

திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் எதிர்பாராதவகையில் ஒரு சிறப்புக் கூட்டமும் நிகழ்த்தப்பெற்றது. இலஞ்சி திரு. I. A. சிதம்பரம் பிள்ளை M. L. C. அவர்கள் தலைமையேற்று மாணவர்களுக்குச் சில அறிவுரை வழங்கினார்கள். திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்களும், இலங்கை வீபுலானந்தர் கல்லூரிப் பேராசிரியர் பண்டித. திரு. V. S. கந்தையா B. O. L. அவர்களும், இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் திரு. தனஞ்சயராசசிங்கம் M. A., அவர்களும் சிறந்த சொற்பெருக்காற்றினார்கள். தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் B. A., அவர்கள் நன்றி நவின்றார்கள்.

திருவெம்பாவை மாநாடுகள்

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் பிரசார சபா மண்டபத்தில் 6—1—61 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. திரு. சா. திருஞானசம்பந்த ஓதுவார் அவர்களால் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை M. A., B. L., "பிறவித்துயர் கெட" என்ற பொருளிலும், சிதம்பரம் பச்சையப்பன் உயர் பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், முதுபெரும்புலவர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் "என்ன குறையும் இலோம்" என்ற பொருளிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் "எங்கெழிலென்ஞாயிறு" என்ற பொருளிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், செஞ்சோற்கோண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் B. A., "திருவடிப் பெருமை" என்ற பொரு ளிலும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருபுவனத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம் பிரசார சபா மண்டபத்தில் 6—1—61 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற் றன. அவ்வமயம் தேவஸ்தான தேவார வகுப்பு மாணவர்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பண்ணிசையுடன் ஓதினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி விரிவுரையாளர், வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் "திருப்பள்ளி யெழுச்சி" என்ற பொருளிலும், கும்பகோணம் நகராட்சி

உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. சோ. கணபதி தேசிகர் "போற்றியருளுக" என்ற பொருளிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. ம. சிவசம்பு "எங்கெழிலென் ஞாயிறு" என்ற பொருளிலும், தருமையாதீன உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. சா. ஞானப்பிரகாசம் "என்னகுறையும் இலோம்." என்ற பொருளிலும் பேசினார்கள். அன்பர்கள்பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருப்பனந்தாளில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திருவெம்பாவை மாநாடு நிகழும் சார்வரியாண்டு மார்கழித் திங்கள் 25 ஆம் நாள் (8—1—61) ஞாயிற்றுக்கிழமை பிரசாரசபா மண்டபத்தில் நிகழ்ந்தது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L. "நாடுமுழுவதும் எம்பாவை" என்ற பொருளிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கல்வெட்டாராய்ச்சி விரிவுரையாளர், கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் "வாதவூரடிகளும், அவரது நூல்களும்" என்ற பொருளிலும், தருமபுரம் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் "திருவெம்பாவை நயம்" என்ற பொருளிலும், நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழ் ஆசிரியர், திரு. வை. மு. சண்முக தேசிகர் "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி உடனிருந்து மாநாட்டைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டு இன்புற்றனர்.

திருக்குவளையில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் திருவெம்பாவை மாநாடு நிகழும் சார்வரியாண்டு மார்கழித்திங்கள்

27 ஆம் நாள் (10—1—61) செவ்வாய்க்கிழமையன்று பிரசார சபா மண்டபத்தில் நிகழ்ந்தது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதம்பெற்றன.

திருவாரூர் கழக உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், கல்வேட்டாராய்ச்சி விரிவுரையாளர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் "திருவெம்பாவையும் கல்வெட்டுக்களும்" என்ற தலைப்பிலும், திருவாரூர், திரு. ச. க. தியாகராஜபிள்ளை "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினுர்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீகுருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக்கழகம்

தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினரின் வார வழிபாடு வழக்கம்போல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்றது. தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் 11—12—60 அன்று உத்தர மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலிலும், 25—12—60, 29—1—61 ஆகிய இருநாட்களிலும் திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயிலிலும், 1—1—61 அன்று மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிலும், 22—1—61 அன்று திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ மாயூரநாத சுவாமி திருக்கோயிலிலும், 8—1—61 அன்று மூவலூர் ஸ்ரீ மார்க்கசகாயேசுவரசுவாமி திருக்கோயிலிலும், 18—12—60, 5—2—61 ஆகிய இருநாட்களிலும் மாயூரம் பாலக்கரை ஸ்ரீ விசுவநாதசுவாமி திருக்கோயிலிலும் வாரவழிபாடும் வழிபாட்டுக் கூட்டமும் நிகழ்ந்தன.

ஆண்டுவிழா :

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினரின் வார வழிபாடு 15—1—61 அன்று மாலை நிகழ்ந்தது. அன்றைய வழிபாட்டோடு ஓராண்டு நிறைவுற்றது. ஆண்டு நிறைவைக்

குறித்து ஸ்ரீ தருமபுரீசர், ஸ்ரீ துர்க்காதேவி, ஸ்ரீ ஞானபுரீசர் முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனை கள் சிறப்புற நிகழ்த்தப்பெற்றன.

வழிபாட்டுக்குப் பின்னர் ஆதீன மடாலயம் பண்டாரக் கட்டில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை வழிபட்டனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் அருளாசி வழங்கி ஸ்ரீ குருஞானசம்பந்தர் பிரசாதம் வைக்கப்பெற்ற பைகளை வழங்கியருளினர்கள்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

திருக்காளத்தியில் :

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 11—12—60 ஞாயிறன்று மாலை திருக்காளத்தியில் சிறப்பாக நடைபெற்றது. இராயபேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜனசபை, சேன்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜம், இராய புரம் இறைபணிக்கழகம், புரசைத் திருநேறிக்கழகம், காஞ்சிபுரம் மேய்கண்டார்கழகம் முதலிய கழகத்தினரும் இவ்வழிபாட்டில் கலந்துகோண்டு சிறப்பித்தனர். வழிபாட்டுக் குழுவினர் சுமார் 500 அடி உயரம் உள்ள கண்ணப்பர் மலை என வழங்கும் குடுமித்தேவர் மலைமீதேறி குடுமித்தேவரையும், கண்ணப்பரை யும் பக்திப்பாடல்களால் பரவிப் பணிந்து வழிபாடாற்றினர்.

குழுவினர் சிவபுராணம் ஓதிக்கோண்டு திருக்காளத்திநாதர் கோயிலை வலம்வந்தனர். சுவாமி சந்நிதியில் அவ்வூர்த் தேவாரப் பதிகங்களை நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் அவர்களும், தேவார இசைமணி, திரு. ப. இலக்குமணன் அவர்களும் இசையுடன் ஓதி எல்லோரையும் இறைவழிபாட்டில் ஈடுபடச் செய்தனர். ஒவ்வோரு சந்நிதியிலும் பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தனர். பிறகு திருக்கோயில் மண்டபத்தில் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான்

சுவாமிகள் அவர்கள் தலைமையில் சமயப்பிரசாரக் கூட்டம் நடைபேற்றது. புலவர் திரு. N.R. முருகவேள் அவர்கள் திருக்காளத்திச் சிறப்பினையும், கண்ணப்பர் அன்பின் திறத்தினையும் பெரிய புராண ஆதாரத்துடன் பேசினார்கள். சுவாமிகள் தமது தலைமை யுரையில், ஆறு உத்தரவாகினியாக அதாவது வடக்கு நோக்கி ஓடுவது சிறப்புடையது என்றும், அத்தகைய இடங்கள் புண்ணிய தீர்த்தங்களாகும் என்றும், திருக்காளத்தியில் பொன் முதலியாறு வடக்கு நோக்கிச் செல்கிறது என்றும், காசியிலும் கங்கை உத்தரவாகினியாகச் செல்கிறது என்றும், திருஞான சம்பந்தர் கண்ணப்பரை வழிபடும்போது கும்பிட்ட பயனைக் காண்பாரைப்போல மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்து வழிபட்டார் என்றும், அவ்வாறு வழிபட்டமை அடியார் பெருமையினை நாமெல்லாம் உணருமாறு வழிகாட்டியதாகும் என்றும், இத்தகைய வழிபாட்டினால் நல்லவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதற்குப் பெருவாய்ப்பாக உள்ளது என்றும், வழிபாட்டினால் மனமும், மொழியும், செயலும் தூய்மை யடைகின்றன என்றும் குறிப்பிட்டார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் நன்றி கூறினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் அறக்கட்டளை ஓதுவார் கடவுள் வாழ்த்துப் பாடி மகிழ்வித்தார். தருமையாதீனச் சார்பில் வழிபாட்டுக் குழுவினருக்கு மதிய உணவும், இரவு சிற்றுண்டியும் வழங்கி உபசரிக்கப்பட்டது.

திருவக்கரையிலும் - மயிலத்திலும் :

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு திருவக்கரை என்ற தலத்திலும், திருமயிலம் என்ற முருகன் தலத்திலும் 8—1—61 ஞாயிறன்று சிறப்பாக நடை நடைபேற்றது. சென்னையிலுள்ள பாலசுப்பிரமணிய பக்தஜன சபை, புரசை திருநேறிக் கழகம், சைவசித்தாந்த மகாசமாஜம், காஞ்சிபுரம் சிவத்தல வழிபாட்டுக் குழுவினர், புதுவை மணி வாசக மன்றம் முதலிய சபையினரும், புதுவை ஸ்ரீ அம்பலத் தாடும் சுவாமிகள் மடாலய அதிபர் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளும் வழிபாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வழிபாட்டுக் குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டே திருவக்கரைக் கோயிலை வலமாக வந்தனர். ஒவ்வொரு சந்நிதியிலும் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தார். சுவாமி சந்நிதியில் அவ்வூர்த் தேவாரப் பாடல்களை ஓதினர். கோயில் அறங்காவலர்களும், சிவாசாரியரும் பூரணகும்ப மரியாதையுடன் குழுவினரை வரவேற்று வழிபாடு செய்துவைத்தனர். புதுவை திரு. சேனாபதி முதலியாரவர்களும், சென்னை திரு. K. C. நாகலிங்க முதலியாரவர்களும் சுவாமி அம்பாள் உள்ளிட்ட சகல பரிவாரங்கட்கும் அபிஷேக ஆராதனை மிகச் சிறப்பாக நடத்திவைத்து வழிபாட்டுக் குழுவினருக்குச் சிறந்த முறையில் மாகேசுவர பூசையும் செய்து உபசரித்தார்கள். ஐந்நூறுக்கு மேற்பட்ட அன்பர்கள் வழிபாட்டிலும், சமயப் பிரசாரத்திலும் கலந்துகொண்டனர். வழிபாடு நிகழ்ந்த பின்னர் திருக்கோயில் முன் மண்டபத்தில் வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப்பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. திரு. P. சுவாமிநாதன், திரு. A. விநாயக முதலியார், திரு. கண்ணப்ப முதலியார், திரு. சுந்தரம் பிள்ளை ஆகியோர் தேவாரப் பாடல்களை இசையோடு ஓதி எல்லோரையும் மகிழ்வித்தனர். புதுவை திரு. செல்வரங்கம், காஞ்சிபுரம் திரு. N. பெரியண்ணன் ஆகியோர் சமயப் பிரசாரத்தின் அவசியத்தையும், திருக்கோயில் வழிபாட்டுச்சிறப்பையும்பற்றிப்பேசினார்கள். சுவாமிகள் தமது தலைமையுரையில் பலரும் ஒன்றுகூடி வழிபடுவதால் சமய ஒழுக்கமும், வழிபாட்டு முறையும் மக்களிடையே பரவ வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தலத்தில் வக்கராசுரன் ஆட்சிபுரிந்தான் என்பதற்கும், அவனைக் காளிதேவி அழித்தாள் என்பதற்கும் அடையாளமாக அவனது எலும்பு போன்று பல கற்களைக் காணுகிறோம். இத்தலத்தில் நடராஜர் இடது பாதத்தை ஊன்றி வலது பாதத்தைத் தூக்கி வக்கர தாண்டவம் புரிகின்றார். முருகப் பெருமானைத் தாங்கியுள்ள மயில்வாகனம் முருகனைப் பார்த்திருப்பது இங்குள்ள தனிச் சிறப்பாகும் என்று அறிவித்தார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினார்.

அன்று மாலை மயிலத்தில் உள்ள முருகன் கோயிலில் வழிபாட்டுக்குழுவினர் முருகப்பெருமானை வழிபட்டனர். முருகன்

சந்நிதியில் பிள்ளைத்தமிழ், திருப்புகழ், கந்தர்அநுபூதி, கந்தர் அலங்காரம் முதலிய பக்திப் பாடல்களைத் திரு. P. சுவாமிநாதன் உருக்கமாக ஓதினார். ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அவர்களும், புதுவை திருநாவுக்கரசு சுவாமிகளும் வழிபாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வழிபாட்டிற்கு முன்னர் பொம்மபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் தலைமையில் கோயில் மண்டபத்தில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மயிலம் மலையின் சிறப்பினையும், முருகப்பெருமான் அம்மலையில் எழுந்தருளிய வரலாற்றினையும், பொம்மபுர ஆதீன மடாலயம் இம்மலையிலேயே இருப்பதற்கு உரிய காரணத்தையும் விளக்கி விரிவுரை நிகழ்த்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அவர்கள் தமது தலைமையுரையில் தருமபுர ஆதீனமும் அதைச் சார்ந்துள்ள சென்னைப் பிரசார நிலையமும் செய்துவரும் தொண்டினைப் பாராட்டி இக்காலத்திற்கு இம்மாதிரியான வழிபாட்டுக்கூட்டம் மிகவும் பயன் தரக்கூடியது என்று கூறினார்கள். புதுவை ஸ்ரீ அம்பலத்தாடும் மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாற்று மாண்பையும் திருவாசகஏடு அம்பலத்தாடும் சுவாமிகள் மடத்தில் வந்த சிறப்பையும் கூறினார்கள். திரு. சிவகுமாரன் நன்றி கூறுகையில் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அவர்கள் மடாலயம் செய்துவரும் தமிழ்த்தொண்டையும், சைவத்தொண்டையும் பாராட்டினார்கள். மயிலத்தில் பொம்மபுரம் ஆதீன அதிபர் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலயசுவாமிகள் அவர்கள் வழிபாட்டுக் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். மயிலம் மடாலயத் தேவாரப் பாடசாலை ஆசிரியரும், மாணவிகளும் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினர்.

திருவெம்பாவை - திருப்பாவை மாநாடு

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 31—12—60 மாலை திருவெம்பாவை மாநாடும், 1—1—61 மாலை திருப்பாவை மாநாடும் சிறப்பாக நடைபெற்றன. மாநாட்டைத் தொடங்கிவைத்த திரு. ஏ. எஸ். பி. ஐயரவர்கள் படைபலமோ, பணபலமோ இல்லாத நாடு நம் இந்தியா. இதற்குப் பெருமை நாற்பது கோடி மக்கள் இருப்பது தான். ஆத்மீகபலம் பொருந்தியிருப்பதுதான் இந்நாட்டின்

பெருமை. பகலில் நட்சத்திரத்தைக் காட்ட இயலாது. அதைக் காணவேண்டிய இரவு காலத்தில் காணலாம். அதுபோல் ஞானம் உதிக்காதகாலத்தில் கடவுள் நமக்குப் புலப்படமாட்டார். ஞானம் உதிக்கிறபோது காணப்படுவார். சூரியன் ஒளியோடு தான் இருக்கிறது. அதை மேகம் மறைத்துவிடுகிறது. மறைப்ப தால் சூரியனைவிட மேகம்தான் பெருமைக்கு உரியதென்று யாரும் சொல்ல வழிஇல்லை. அதுபோல் ஆஸ்தீகத்தை மறைக் கின்ற நாஸ்தீகமும் பெருமைக்குரியதல்ல. திருவெம்பாவை, திருப்பாவை பாடல்கள் நமக்கு ஆத்மஞானத்தைப் பெருகச் செய்து கடவுளிடத்தில் ஈடுபடுத்தவல்லது. எல்லோரும் இப் பாவைப் பாடல்களைப் படிப்பது நாட்டிற்கு நலம் தரும் என்று கூறினர்கள்.

முதல் நாள் தலைவர் தருமையாதீனப் புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் திருவெம்பாவைப் பாடல் களைத் திருவாதிரையை ஒட்டிப் பத்து நாட்களிலும் விழாவாகக் கோயில்களில் கொண்டாடுவதே அதன்தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுகிறது என்று குறிப்பிட்டார்கள். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் விஞ்ஞானிகள் இக்காலத்தில் கண்டு கூறுவதை எல்லாம் மாணிக்கவாசகர் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே குறிப்பிட் டுள்ளார் என்று திருவெம்பாவைச் சிறப்புப்பற்றி பேசியபோது குறிப்பிட்டார்கள். மதுரை பாதீமா பெண்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருமதி. ஆர். சரோஜனி அம்மையார் பாவை வழிபாடு என்பதுபற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினர்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினர்.

இரண்டாம் நாள் திருப்பாவை மாநாட்டிற்குத் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். பெண் மணிகளும் கவிபாடும் சிறப்புவாய்ந்த நாடு நம்முடையது. மேலைநாட்டில் இதனைக் காண இயலாது. விஞ்ஞானம் என்ற சொல்லிற்கு கண்டுபிடித்தது என்பது பொருள். விஞ்ஞானிகள் இப்பொழுது கண்டுபிடிப்பதெல்லாம் நமதுநாட்டு மெய்ஞானிகள் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே கண்டுசொன்னவைதான். விஞ் ஞானிகள் கண்ணைத் திறந்துபார்த்துக் கண்டுபிடிப்பதை நமது ஞானியர்கள் கண்மூடி மௌனியாகியே கண்டு சொன்னர்கள்.

அவற்றை இரண்டாகப் பிரிக்கவே விஞ்ஞானிகள் கண்டார்கள். நமது ஞானிகள் நூறு கூறாகப் பிரித்து நூற்றில் ஒரு கூறுக்கு கோன் என்றும் பெயர் கொடுத்துள்ளார்கள். பெரிய புராணம் ஒப்பற்றகலைக்களஞ்சியமாகவிளங்குவது. காரைக்கால் அம்மையார் வரலாற்றால் மக்கள்தம் வாழ்வுமுறையினை எப்படி மேற்கொள்வதென்பதை தெளிவுபடுத்துகிறது பெரியபுராணம். மழை வளமும், மணவாழ்வு வளமும் அவற்றால் நாட்டு வளமும் பெறவைக்கும் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்களை மக்கள் வாழ்வில் கடைப்பிடித்துப் பயனடைவார்களாக என்று தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். திருமதி. நீலாவதி இராமசுப்பிரமணியம் அவர்கள் பாவைநோன்பு என்பது பற்றியும், திரு. திருமலைமுத்துசுவாமி அவர்கள் திருப்பாவை சிறப்புப்பற்றியும் அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். நிலையத் திருமுறை வகுப்பின் பழைய மாணவி செல்வி. எல். இந்திரா கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இருநாட்களிலும் வரவேற்புரையும், நன்றியுரையும்கூறி உடனிருந்து நடத்திவைத்தார்கள்.

பொங்கல் புதுநாள்

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 14—1—61 மாலை பொங்கற் புதுநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சைதாப் பேட்டை ஆசிரியர், கல்லூரி முதல்வர், திரு. M. R. பெருமாள் முதலியார் M. A., L. T., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் ஒவ்வொரு ஆண்டிலும் நம்மிடம் சேர்ந்துள்ள அழுக்குகளை அகற்றித் தூய்மையுடன் மகிழ்ச்சி பொங்கச் செய்வது இப் பொங்கற் புதுநாள் என்றும், புறத்தேயுள்ள அழுக்குகளைப் போக்கினால் மட்டும் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்காது என்றும் உள்ளத்திலே உள்ள காமக்குரோதம் முதலிய அழுக்குகளையும் போக்கினால் தான் உண்மையான மகிழ்ச்சி பொங்கும் என்றும், இப்புனித நாளில் அன்பு, பொறுமை, அவாஇன்மை முதலிய நற்குணங்களை வாழ்வில் கடைப்பிடிக்க உறுதிகொள்ளவேண்டும் என்றும், அழுக்கில்லாத தூய்மையான உள்ளத்தில்தான் இறைவன் உறைவான் என்றும் குறிப்பிட்டார்கள்.

"மகரசங்கராந்தி பலன்" என்பது பற்றித் திரு. T. N. கோபால சர்மா அவர்கள் பேசுகையில் பொங்கல் திருநாள் தொடங்கி சூரியன் வடக்கு நோக்கி யாத்திரை செய்கின்ருன் என்றும், நடுத்தரமான பலன் விளையும் என்றும் குறிப்பிட்டார்கள்.

"பொங்கல் புதுநாள்" என்பது பற்றித் திரு. N. R. முருகவேள் அவர்கள் பேசுகையில் பண்டைக்காலந்தொட்டு நம் நாட்டில் கொண்டாடப்பட்டு வருவன பண்டிகைகள் என்றும், மாடு நம்முடன் ஒத்து உழைப்பதால்தான் செல்வம் பெருகுகிறது. அதனால்தான் மாடு என்ற சொல்லே செல்வத்தைக் குறிக்கிறது என்றும் பழைமையை அகற்றி அல்லது புதுக்கி புதிய விளை பொருள்களைப் புதுப்பானையில் பொங்கி இறைவனுக்குப் படைத்துப் பின்னர் எல்லோரும் மகிழ்வோடு உண்ணுவதையே இப் பொங்கல் புதுநாள் நமக்கு அறிவிக்கிறது என்றும், நன்றியறிதலைத் தமிழ்மக்கள் எவ்வாறு போற்றிவந்தனர் என்பதை எடுத்துக்காட்டுவது இப்பொங்கற் புதுநாள் என்றும் சங்க இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கினுர்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினுர்கள். சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினுர்.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

திருஅரசிலி, திருஇரும்பைமாகாளம் :

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 5—2—61 ஞாயிறன்று புதுவைக்குச் சமீபத்திலுள்ள திருஅரசிலியிலும், திருஇரும்பை மாகாளத்திலும், சிறப்பாக நடைபெற்றது. திருஅரசிலியில் ஸ்ரீஅரசிலிநாதர் தேவஸ்தான தர்மகர்த்தா திரு. நாராயணசாமி நாயுடு, சிவாசாரியார், ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் பூர்ண கும்ப மரியாதையுடன் வழிபாட்டுக்குழுவினரை வரவேற்று, சிற்றுண்டி அளித்து உடனிருந்து சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். குழுவினர் சிவபுராண பாராயணத்துடன் திருக்கோயிலை வலம் வந்து வழிபாடு இயற்றினர். நிலையத் திருமுறை வகுப்பு

ஆசிரியர் பி. சுவாமிநாதன் அவ்வூர்த் தேவாரப் பதிகத்தை சுவாமி சந்நிதியில் ஓதினர். வழிபாட்டின் பின்னர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களும், கயப்பாக்கம், திரு. சோம சுந்தரஞ் செட்டியாரவர்களும் அரசிலியின் பெருமைபற்றியும், தேவாரப் பதிகத்தின் சிறப்புப் பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள்.

நண்பகலில் திருஇரும்பைமாகாளத்தில் வழிபாட்டுக் குழுவினர் வழிபாடு நிகழ்த்தினர். மாகாளேசுவரர் தேவஸ்தானம் தர்மகர்த்தர் திரு. இராமசுவாமி நாயுடு, சிவாச்சாரியர் ஊர்ப் பொதுமக்கள் ஆகியோர் குழுவினரைப் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று உடனிருந்து வழிபாடு நிகழ்த்திவைத்தனர். குழுவினர் திருத்தொண்டத்தொகை பாராயணத்துடன் திருக்கோயில் வலம் வந்தனர். சுவாமி சந்நிதியில் அவ்வூர்ப் பதிகத்தினை திரு. சுவாமிநாதன் ஓதினர். வழிபாட்டின் பின்னர் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. சிவகுமாரன் அவர்கள் முற்காலத்தில் இரும்பைமாகாளக்கோயில் இருந்த சிறப்பினையும் இப்பொழுது பழுதுற்று இருக்கும் நிலையினையும் எடுத்துக்கூறி சைவர்கள் சிவன்கோயில்களைப் பாராமரிக்க வேண்டிய கடைமையை அறிவுறுத்தினர். தலைவர் தமது தலைமையுரையில் தர்மகர்த்தாக்களாக உள்ளவர்களின் கடைமைகளை விளக்கித் திருக்கோயில் செம்மையான முறையில் பாதுகாக்கப்படாவிட்டால் அந்த ஊராருக்கும், நாட்டிற்கும், தர்மகர்த்தர்கட்டும் தீங்கு விளையும் என்று திருமூலர் கூறியுள்ளதை எடுத்துக் காட்டினார்கள். பலதுறையிலும் பணிசெய்துவரும் மக்கள் அனைவரையும் ஒன்று கூட்டி நல்ல சிந்தனையிலும், செயலிலும் ஈடுபடுத்திவரும் தருமபுர ஆதீனப் பிரசார நிலையத்தின் தொண்டு போற்றத் தக்கதென்றும் கூறினார்கள். அடுத்த மாத வழிபாடு 5—3—61ல் பூண்டி நீர்த் தேக்கத்திற்கருகில் உள்ள திருவெண்பாக்கத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. புதுவை ஆடை வாணிபம் திரு. சேனாதிபதி முதலியாரவர்கள் வழிபாட்டுக் குழுவினருக்குப் புதுவையில் நண்பகல் மகேசுவர பூசையும், மாலை சிற்றுண்டியும் செய்து வைத்து உபசரித்தார்கள். புதுவை டிப்டி மேயர் திரு. சேதுராமச் செட்டியார்,

திரு. பழநிசாமி முதலியார் முதலிய பெருமக்களும் குழு வினரை வரவேற்று உபசரித்தனர். மாலையில் புதுவையில் உள்ள மனக்கோள விநாயகர்கோயில், ஸ்ரீ காளத்திநாதர்கோயில் ஸ்ரீ வேதபுரீஸ்வரர் கோயில் ஆகியவற்றிற்குச் சென்று திருமுறை களை ஓதி வழிபட்டனர்.

பிறகு ஸ்ரீ வேதபுரீஸ்வரர் கோயிலில் உள்ள ஸ்ரீ வேத புரீஸ்வரர், வரதராஜப்பெருமாள் நூல் நிலைய ஆண்டு விழாவில் வழிபாட்டுக் குழுவினர் பங்குகொண்டு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு. சச்சிதானந்தம் பிள்ளை வாழ்த்துரை வழங்க திரு. ச. சிவகுமாரன் அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்பதுபற்றியும், புலவர் திரு. முருகவேள் அவர்கள் "கோவை திருவாசகம்" என்பது பற்றியும், திருமதி இராஜரத்தினம் அம்மையார் "புனிதவதியாரின் இல்லற மாண்பு" என்பதுபற்றியும், திரு. வேங்கடராம ரெட்டி யார் "திருவிருத்தம்" என்பதுபற்றியும் விரிவுரையாற்றிச் சிறப்பித்தார்கள். சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினார். நூல் நிலையச செயலாளர் திரு. ரா, தேசிகன் நன்றி கூறினார்.

ஏழாவதாண்டு நிறைவு விழா வாழ்த்துக்கள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் தருமபுரம், மாயூரம் P.O.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் 29-12-60

'ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே'

சமய விழிப்புணர்ச்சி நாட்டில் இப்போது மீண்டும் உருவாகி வருகிறது. திருக்கோயில் வழிபாடு. கடவுள் சிந்தனை முதலிய வற்றில் மக்கள் பெரும்பாலோர் ஈடுபட்டுவருகின்றனர். சமய நூல்களைப் படிக்கும் எண்ணமும் இப்போது வளர்ந்துவருகிறது.

இக்காலத்தில் நம் சமய உண்மைகளை நல்ல முறையில் எடுத்துச் சொல்வது சமய நிலையங்களின் கடமை. இந்தப் பணியைத்தான் தமிழகத்தின் தலைநகரில் நமது சமயப் பிரசார நிலையம் செய்து வருகிறது. பிரசாரம், வார வழிபாடு, சமயச் சிறப்புத் திருநாட்களைக் கொண்டாடுதல், சைவசித்தாந்த சாத்திர வகுப்பு, திருமுறை வகுப்பு நிகழ்த்துதல் முதலிய பல வழிகளால் சமய வளர்ச்சிப் பணிசெய்து வருகிறது இந்நிலயம். சென்னையில் சைவ சமயப் பெருமையினை அறிய விரும்புவார் அனைவர்க்கும், இது ஒரு கல்விக்கூடமாக விளங்கி வருகிறதென்பது இந்நிலயத்தைப்பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்தாகும்.

இந் நிலையத்தின் ஆண்டு விழா நமது அன்பர் திரு. கணபதியா பிள்ளை அவர்களின் தலைமையில் நிகழ்வது சிறப்புக்குரியது.

ஆண்டுவிழா சென்ற ஆண்டில் செய்த பணிகளையும் வரும் ஆண்டில் செய்யவேண்டிய செயல்களையும் திட்டம் செய்தற்குரிய திருவிழா.

இந்நிலயத்தின் ஆண்டுவிழா எல்லா வகையிலும் இனிதின் நிகழ நமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய செந்தமிழ்ச் சொக்கர் திருவடிகளைப்போற்றுகின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

உ

மகாமகோபாத்யாய டாக்டர், உ. வே. சாமிநாதய்யர்
நூல் நிலையம் அடையாறு, சென்னை-20

அத்யக்ஷர் : ருக்மிணிதேவி 29—12—60

சென்னை மாநகர்க்கண் அமைந்துள்ள திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலயத்தின் ஏழாவது ஆண்டு விழாவின் அழைப்பு கிடைக்கப் பெற்றேன். நன்றி, இவ்விழா மிகச் சிறந்தமுறையில் நடைபெறவேண்டி வாழ்த்துகின்றேன். மக்கள் நன்னெறி வாழ்க்கையை உயர்த்தவேண்டியும் கடவுட் கொள்கையைப் பரப்பவெண்ணியும் மேற்படி

நிலயம் கண்ணும் கருத்துமாக உழைத்து வருவது பெருமகிழ் வைத் தருகின்றது. செந்தமிழ்க்கும் சீரிய சைவ சமயத்திற்கும் இடைவிடாது தக்க முறையில் உழைத்துவரும் நிலயம் மேன் மேலும் சிறந்து பணியாற்றித் திகழ்வதாக,

C. இராஜகோபாலாச்சாரி　　60, பஸ்ஸுல்லா ரோடு,
தியாகராயநகர், சென்னை - 17.
30—12—60

தருமபுரத்து ஆதீனத்து சென்னை நிலயம் ஏழு ஆண்டு களாக மிகச் சிறந்த பணியாற்றிவருவது சென்னைவாசிகள் அனைவரும் அறிந்தவிஷயம். பெரியோர்கள் நமக்கு வைத்துப் போன பெருஞ்சோத்து நம்முடைய சமயங்கள். நாட்டில் ஒழுக்க மும் தெய்வபக்தியும் சீரழியாமல் இருந்தாலேதான் முன்னேறு வோம் என்பது நிச்சயம். அதற்காக தருமபுரத்து ஆதீனமும் அதன்கீழ் பணியாற்றிவரும் நிலயமும் செய்துவரும் சேவையை மக்கள் போற்றிவருவது மகிழ்ச்சிதரும் விஷயம்.

திருவையாறு தேவஸ்தானத்திற்கு
ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் அவர்கள் விஜயம்

திருக்கயிலாயபரம்பரைத்தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்திற்கு ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் விஜயம் செய்தார்கள். ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மருவூரி லிருந்து 23—1—61 அன்று திருவையாறு தேவஸ்தானம் புஷ்யமண்டபத்துறை கட்டிடத்தில் பூசையுடன் முகாம்செய்தார் கள். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் யாவும் தேவஸ் தானச் சார்பில் செய்துகொடுக்கப்பட்டன.

24—1—61 காலை தேவஸ்தானம் குருக்களை பிரசாதத் துடன் பார்க்கச்செய்து கட்டளை விசாரணை சுவாமிகள் அவர்கள் சூப்பரிண்டெண்ட், காஷியர் ஆகியவர்களுடன் சென்று ஆலயத் திற்கு வருமாறு அழைத்தார்கள். 25—1—61 அன்று காலை 6 மணிக்கு தரிசனத்துக்கு கோயில் சந்நிதி ராஜகோபுரம் வழி யாக எழுந்தருளினார்கள். கோபுரவாயிலில் யானை முதலிய தேவஸ்தான மரியாதைகளுடன் முறைப்படி பூர்ணகும்பம் கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஸ்ரீஜயாறப்பர், ஸ்ரீ ஆட்கொண்டார், ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி முதலிய எல்லா மூர்த்திகளையும் தரிசனம் செய்தார்கள். ஸ்ரீ அம்பாள் சந்நிதியில் பட்டு கட்டி மரியாதை செய்யப்பட்டது. நிழற்படமும் எடுக்கப்பட்டது. சுமார் 2½ மணிநேரம் கோயிலின் எல்லா பாகங்களையும், திருப்பதிகக் கல்வெட்டுகள், பழங்கால சித்திரம் இவைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்ருகப் பார்வையிட்டார்கள். தேவாரவகுப்புக் குழந்தைகளை பாடச்சொல்லியும் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களைக்கொண்டு பதப்பொருள் சொல்லச்சொல்லியும் கேட்டு மகிழ்ந்தார்கள்.

நீண்ட காலத்திற்குப் பிறகு இங்கு தரிசனம் கிடைத்தது மிகவும் நிம்மதி என்று தெரிவித்தார்கள். தரிசனத்தின் பொழுது உள்ளூர்ப் பொதுஜனங்களும், சப்மாஜிஸ்ட்ரேட், பஞ்சாயத்துபோர்டு பிரசிடேண்ட் முதலியவர்களும் கலந்து கொண்டார்கள்.

<u>கடிதம்</u>

உ

His Holiness Sri Kanchi Kamakoti Pithadhipadhi

Jagadguru Sri Sankaracharya Swami Mutt

Kancheepuram

காம்ப் :- திருவிடைமருதூர்

தேதி :- 4—2—61.

க்ஷேமம்.

தங்கக் கொடிமரமும், அதனை அமைத்தவர் உள்ளமும் களிறு வருவனக் கண்டேன் என அப்பர் வாக்கின்படி உலவும் ஒரு களிற்றுக் கன்றும், அடியார்களின் அருள்வாக்குகள் திருச் சுவர்தனில் வரையப்பெற்றிருப்பதும், எங்கும் துப்புறவும், தெய்வஸாந்நித்யமும் ஓங்கத் திருக்கோயில் தொண்டர் முயற்சியும் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் உள்ளத்தைக் கவர்ந்த செய்தியை ஆணைப்படி மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளும் காரியம்.

To

The Temple Superintendent,
Tiruvaiyaru.

(Sd) Illegible
Manager.

எதிர்காலம் ☞	கே. முத்துஜோதிடர்

(சார்வரிஹு மாசிமீ 1உ முதல் 30உ முடிய)
(12—2—61 முதல் 13—3—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி 4 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவும், தொழில் கவலையும் காட்டும். பரணி முதற் பாதம் இல்லறசுகத்தையும், ஆடையாபரணச் சேர்க்கையையும் தரும். பரணி 2, 3, 4ம், கார்த்திகை முதற்பாதமும் தேச சஞ்சாரத்தையும், அபவாதங்களையும் தொழில் நஷ்டத்தையும் காட்டும். மாதக்கடைசி பத்து தினங்களில் எதிர்பாராத சில நன்மைகளைத் தரும். புதன் வெள்ளி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணீ - மிருகசீர்ஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும் வெற்றியைத்தரும். வித்யா விருத்தியாகும். தொழில் கிடைக்கும். ரோஹிணி 4 பாதங்களும் மிச்ர பலனையும், வியாதி பயத்தையும் தரும். நஷ்டம் காட்டும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் ஆரோக்யத்தையும், நூதன கிரஹ லாபங்களையும் தொழில் விருத்தியையும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமாகும். தொழில் ஓங்கும். ஆரோக்யம் தரும். இடம் மாறும், மனம் சஞ்சலம் மாத்திரம் இருந்துகொண்டிருக்கும். சேவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4ம் பாதமும், பூசம் முதற் பாதமும் விஷேச சுபத்தைத் தரும். உயர்பதவி கோடுக்கும். க்ரஹ, பூமி, லாபங்கள் ஏற்படும். வித்யா விருத்தியாகும். பூசம் 2, 3, 4 பாதங்களும், ஆயில்யம் 4 பாதங்களும் விசேஷாதிகா

கௌரவங்களையும் நூதன க்ரஹ, பூமி லாபங்களையும் தரும். உலகப் பிரசித்தி ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் ஸ்திரஜீவனத்தையும், சுகஜீவனத்தையும் தரும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். சுபசோபனுதிகள் ஏற்படும். மனம் சந்தோஷமடையும் ஆரோக்யம் உண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் மகாசாம்ராஜ்ய யோகத்தைத் தரும். அசாத்யமெல்லாம் சுலப சாத்யமாகும். தெய்வீகத் தன்மை ஏற்படும். விசாலமான்கீர்த்தியையும் மகாதானப்ரதிஷ்டா பலன்களையும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் இடம் மாறச்செய்து சுபத்தைத் தரும். உத்தியோகம் ஒங்கும். சுவாதி 4 பாகங்களும், விசாகம் 3 பாதங்களும் தெய்வீகத் தன்மையால் பிரகாசிக்கும். சகல துக்கங்களும் நிவர்த்தியாகும். எதிர்பாராதபடி தன தான்ய லாபங்கள் ஏற்படும். மேலோர், பெரியோர் அன்பு கிட்டும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கச்செய்யும். தெய்வபலம் முன் நிற்கும். புதன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத் தரும், பரஸ்தலவாசமும், அடிக்கடி சஞ்சாரபலனும் ஏற்படும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வுகாட்டும். நூதன தொழில் ஏற்படச் செய்யும். வெள்ளி சனி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் 4 பாதங்களும் சுபமிராது. இடம் மாறும். துக்க பலனைத் தரும். பூராடம் 4 பாதங்களும், உத்திராடம் முதற்

பாதமும் துக்க நிவர்த்தியாகி வெகுகாலம் எதிர்பார்த்து நடவாத காரியங்களைச் சுலபத்தில் நடக்க செய்யும். கடன் நீங்கி சுகம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் உயர்பதவிகளைத்தரும். உலகப் பிரசித்தி ஏற்படச்செய்யும், கீர்த்தி பத்ரம் கிடைக்கச் செய்யும், மேலோர், பெரியோர் அன்பு கிட்டும், தனலாபம் ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும்; நலனைத்தரும். இல்லறம்ஓங்கும் நஷ்டமான பொருள் வந்து சேரும். துன்பம் நீங்கி சுகம் உண்டாகும். திங்கள், புதன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4-ம் பாதம் மிச்ரபலனைத்தரும். அதிக உழைப்பும், அதிக விரயமும் உண்டாகும். உத்திரட்டாதி 4 பாதங்களும், ரேவதி 4 பாதங்களும் சுபமாகும். உத்யோகம் ஓங்கும். எதிர்பாராத லாபங்கள் கிடைக்கச் செய்யும். கிரய, விக்ரய கௌசலமும், தொழில் விருத்தியும் ஏற்படச்செய்யும். நினைத்த தெல்லாம் கைகூடும். தெய்வபலம் முன்நிற்கும், புதன் வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- உலகில் அமைதியும், சுபிட்சமும், தன தான்ய விருத்தியும், ஆரோக்யமும், மக்களுக்கு சந்தோஷ வாழ்வும், இயற்கைகள் சரியாகவும் நடந்து கொண்டு தெய்வீகத்தன்மை எங்கும் பிரகாசிக்கும்படியாக மகாஜனங்கள் சத்யம், தருமம், தயை, ஈகை, பரோபகார சிந்தனை, அன்பு, ஒழுக்கம் முதலியவைகள் தவருமல் நடந்துகொண்டு சதா தெய்வசிந்தனையுடன் இருந்துவர மேல்கண்ட சுபங்கள் யாவும் தானுக வந்து சேரும். இனி உலகில் மக்களிடம் மேற்கண்ட சுபகுணங்கள் அமைந்தால்தான் எதிர்காலம் மேற்கண்டபடி சுபமாகவே நடக்கும். அடிக்கடி பிலவ வருஷம் பங்குனி மாதம் முடிய ஒவ்வொரு கிராமந்தோறும் சென்றமாத இதழில் எழுதியபடியே மகா யக்யங்களும், லக்ஷ கோடி அர்ச்சனைகளும், தானதருமங்களும் செய்துகொண்டேவர சுப முண்டாகும்.

மதிப்புரை

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

[ஆசிரியர்; வித்துவான். திரு. சே. வேங்கடராமச் செட்டியார் அவர்கள், தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்; பேராசிரியர், பல்கலைச்செல்வர், திரு. தே. போ. மீ. அவர்கள் அணிந்துரையுடன்; விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே-சென்னை 1; பக்கங்கள்310; விலைரூ. 4-50]

நெடுநல்வாடையின் அழகிய புது விளக்கமாகப் 'புனையா ஓவியம்' என்ற புத்தகம் எழுதிய இந்நலலாசிரியரே, இப்போது தம் ஆராய்ச்சி விருந்தாகச் சங்க நூல் முதலியவற்றிற் காணப் பெறும் விலங்குகள் முதலாக நீர்வாழுயிர்கள் ஈருக எடுத்து ஆராய்ந்துள்ளார். இந்நூலிற் பெரும்பகுதிகள் நம் ஆதீன இதழாகிய இவ் 'ஞானசம்பந்தத்தில்' வெளிவந்தவை. தமிழில் விலங்கியல் நூல் (Zooiogy) இல்லாக் குறையை இத்தகைய நூல்கள் நீக்கும் என்று கூறவும் வேண்டுமோ? ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியும், ஒப்பியலறிவும் நன்கு விளங்க இப்பணியை நிறைவேற்றியுள்ள இவ்வாசிரியரைத் தமிழகம் நன்கு பாராட்டும், இத்தகு புதுத்துறைகளில் மேலும் பல நூல்களை எழுதியுதவுதல் இவ்வாசிரியர் கடமை எனவும் கூறலாம். ஐம்படைத் தாலி பற்றிய விளக்கம், (பக். 64-65) இருதலைப்புள் (பக். 96) வெள்ளாங் குருகின் (பக். 155) பிள்ளை சேத்தேன (ஐங்குறு 151) என்பதற்கு உளவியல் கலந்த புதுவிளக்கம், காக்கைபாடினியார் பாடல் பண்பு நலம், (பக். 133) ஓதலாந்தையார் பாடல் நலம் (பக் 137) முதலிய பல்வேறு பகுதிகளைப் பயிலும்போது ஆசிரியரின் புலமையும், சிந்தனைத் திறனும் நன்கு புலனுகின்றன. உயிர்வகைகளை, 'இலக்கிய நயத்தோடு ஒன்று சேர்த்தே ஆசிரியர் விளக்குகின்ருர்; எனவே சாறற்ற வற்றலாகாது மிக மிக இனிக்கும் இலக்கிய விருந்தாகவே ஆசிரியர் இந்த நூலை ஆக்கித் தந்துள்ளார்' என்று தம் அணிந்துரையில், பல்கலைச் செல்வர் அவர்கள் கூறுவார்களாயின் வேறு என் கூறுவது? இலக்கிய நயங்களை எண்ணி எண்ணி கல்லூரி மாணவர்களுக்குப் பல்லாண்டுகளாகக் கற்பித்த அநுபவம் ஆசிரியர்க்குத் துணை செய்கிறது. அதனுல் இந்நூல் விலங்குநூல் என்பதனேடு சிறந்த இலக்கியப் படையலாகவும் திகழ்கின்றது. அழகிய எழுத்துக்களும், கட்டமைப்பும் அமைய நூல் நன்கு கவர்ச்சியுடனும் விளங்குகின்றது. ஆராய்ச்சியாளரும், நூலகங்களினரும், மாணவர்களும் இந்நூலினைக் கற்றுப் பயன்படுத்துமாறு ஆற்றுப்படுத்துகின்ருேம். -வித்துவான், சோ. சிங்காரவேலன், பி.ஏ..

உ

குருபாதம்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்குக்

கனகாபிஷேக விழா

நிகழும் சார்வரிஆண்டு மாசித்திங்கள் 29 ஆம் நாள் (12—3—1961) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு மடாலய திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் கனகாபிஷேகம் நடைபெறும்.

நிகழ்ச்சி

10—3—1961 வெள்ளிக்கிழமை

கணபதி ஹோமம், கஜபூஜை, கோபூஜை, ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் அஷ்டகஜபூஜை முதலியன.

11—3—1961 சனிக்கிழமை

மிருத்யுஞ்சய ஹோமம், நவக்கிரக ஹோமம் முதலியன.

12—3—1961 ஞாயிற்றுக்கிழமை

காலை—8 - 30 மணிக்கு ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூஜா தரிசனம்

ஸ்ரீ ஞானபுரீசுவரராலய தரிசனம்.

,, 11 - 0 மணிக்குக் கனகாபிஷேகம்.

செய்விப்போர் :-

ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி அருணந்தி
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

மாலை—4 - 0 மணிக்குச் சிறப்புக் கூட்டம்.

திருமுறை ஓதுதல்.

தொடக்க உரையும் விழாமலர் சமர்ப்பணமும்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

பாராட்டிதழ் வாசித்தளித்தல் :

1. உயர்திரு. N. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், B.A., B.L., கனகாபிஷேக விழாக்குழுத் தலைவர்.

2. மாயூரம் நகராண்மைக் கழகம்

வரவேற்புரை :

உயர்திரு. I. A. சிதம்பரம் பிள்ளை அவர்கள், M.A., M.L.C. இலஞ்சி.

சிறப்புரை :

கனம். டாக்டர். P. சுப்பராயன் அவர்கள், Bar-at-law இந்திய அரசாங்கப் போக்குவரத்து அமைச்சர்.

வழிமொழிதல் :

உயர்திரு. S. A. அய்யாசாமி செட்டியார் அவர்கள், B.A., B.L., சென்னை.

பாராட்டுரை :

டாக்டர். இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள் B.Sc., M.D., M.R.C.P. (London) சென்னை.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் ஆசிவழங்கல்

நன்றியுரை :

உயர்திரு. B. திருஞானம் பிள்ளை அவர்கள் B. A., B. L.

வாழ்த்துரை :

இரவு—8 - 30 மணிக்குப் பட்டணப்பிரவேசம்.